Registered as a Newspaper in Sri Lanka

விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 பிரமோதூத ஸ்ரீ சித்திரை ௴ 07ஆம் உ வெள்ளிக்கிழமை (20 - 04 - 1990) ஹிஜ்ரி 1410 றம்ழான் 23 ஓசை 61

## ரிசேர்வ் பொலிஸ் நேர்முகப் பரீட்சை பெண்களும் சேர்க்கப்படுவர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ரிசேர்வ் பொலிஸ் படைக்கு ஆள் சேர்க்கும் நேர்முகப் பரீட்சை இன்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெறும். ரிசேர்வ் ஏ. எஸ். பி., எஸ். ஐ., பொலிஸ் கான்ஸ்டபிள், பெண் பொலிஸ் ஆகிய பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. ஏலவே அரசாங்க வர்த்தமானியில் வடக்கு-கிழக்கு ரிசேர்வ் பொலிஸ் படையில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

வர்த்தமானியில் கேட்கப்பட்டிருந்த தகைமைகளுக்கமைய விண்ணப்பித்திருந்த விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள், வடக்கு-கிழக்கு பிரதிப் பொலிஸ் மா அத்தியட்சகரினால் பரிசீலிக்கப்பட்டு, தகைமை (6 ஆம் பக்கம் பார்க்க)

# கரைகாணா மக்கள் வெள்ளம்

# எழுச்சி நாள் கொண்டாடியது!

## தமிழீழமெங்கும் உணர்ச்சி அலை

சிலவருடங்களின் பின் கரைகாணா மக்கள் வெள்ளம் நேற்று பிற்பகலிலிருந்து இரவுவரை நல்லூரில் கூடி எழுச்சி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது. குடாநாட்டின் பல இடங்களிலிருந்தும் பேரணிகள் நல்லூர் வீதியில் வந்து குவிந்தன. விடுதலைக் கோஷங்களும் விடுதலைக் கீதங்களும் வீதிகளில் முழங்கின. நல்லூர்வீதியில் அமைந்த அலங்கார மேடையில் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஸ்ரான்லி டொமினிக் தலைமை வகிக்க முன்னாள் திருக்கோணமலை இராணுவப் பொறுப்பாளர் லெப்டினட் கேர்ணல் சந்தோஷத்தின் (உமைநேசன்) தந்தையார் பண்டிதர் கணபதிப்பிள்ளை அன்னை பூபதியின் உருவப் படத்தைத் திரை நீக்கம் செய்து வைத்தார்.

பழைய யாழ்ப்பாண ராஜதானியான நல்லூரில் எழுச்சி நாள் விழா நேற்றுப் பிற்பகலில் ஆரம்பமான அதே சமயம் வரலாற்றுப் புகழ் மிக்க திருக்கோணமலையில்கோலாகலமாக நடந்த எழுச்சி நாள் விழாவிற்கு திருமலை மாவட்டப் பொறுப்பாளர் தலைமை வகிக்க விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ, மகேந்திரராசா (மாத்தயா), கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் மேடையில் வீற்றிருந்தனர். தமிழ் முஸ்லிம் மக்கள் ஊர்வலமாகப்பல பகுதிகளிலுமிருந்து வந்து இக்கூட்டத்தில் வெள்ளம்போல் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு நகரில் வெபர் மைதானத்தில் நேற்றுப் பிற்பகல் நடந்த எழுச்சி விழாவுக்கு மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் அன்னை பூபதியின் உருவப் படம் தாங்கிய கொடிகளையும் சுலோக அட்டைகளையும் தாங்கியபடி பெருந்

(6ஆம் பக்கம் பார்க்க)



## கிளிநொச்சி அபிவிருத்திக்கு போதிய நிதி கிடைப்பதில்லை

### கிளிநொச்சி அரசாங்க அதிபர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி சம்பந்தமான மகாநாடு ஒன்று கிளிநொச்சிக் கச்சேரியில் அரசாங்க அதிபர் திரு இ. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது.

இம்மகாநாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கணபதிப்பிள்ளை தில்லைநாதன் (ஈழவர் முன்னணி). தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க இணைப்பாளர் திரு. சிவபாதம் (சிவா) மற்றும் சகல திணைக்களங்களின் உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்,

அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் அங்கு பேசுகையில் கூறியதாவது:

இம்மாவட்டத்தின் அத்தியாவசிய அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள வேண்டுமானால் ஆகக் குறைந்தது பத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒதுக்கப்படும் நிதியாவது எமக்குத்தேவைப்படும். எமக்குக் கிடைத்துள்ள நிதியோ ''ஆனைப்பசிக்கு சோழப்பொரி கிடைத்த மாதிரி''

எமக்குக் கிடைத்த நிதியைக் கொண்டு வேலைகளை (6ஆம் பக்கம் பார்க்க)

## வட - கிழக்கு மாகாணங்களுக்கு தமிழ் பொலிஸார் நியமனம்

### பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை

(மட்டக்களப்பு)

வட -கிழக்கு மாகாணங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்குஉடனடியாகப்போதிய அளவுத் தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர்களை அனுப்புவதற்கான நடவடிக்கைகளை பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டுள்ளது.

வட - கிழக்கு மாகாணத்திற்குவெளியேயுள்ள பொலிஸ் நிலையங்களில் பணி புரியும் தமிழ். முஸ்லிம் பொலிஸாரை இடமாற்றம் செய்வதன்மூலம் தற்போதுஇம்மாகாணங்களில்

## அம்பாறை திஸ்ஸபுர பகுதி தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு


(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள திஸ்ஸபுர எனும் சிங்

இடங்களுக்குகுடிபெயர்ந்தன

ஆனால் சில குடும்பங்கள் இன்னும் அங்கேயே வாழ்ந்து

## மாபெரும் இசை நிகழ்ச்சி



(யாழ்ப்பாணம்)

தமிழீழ எழுச்சிப் பாடல்களில் பலவற்றைப் பாடிய தேனிசைச் செல்லப்பா இன்று யாழ் நகர் வருகின்றார். இவர் எதிர் வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு மாபெரும் இசை நிகழ்ச்சி ஒன்றை முத்தவெளி மைதானத்தில் நிகழ்த்தவுள்ளார்.

இலங்கைத் தமிழருக்காக பல எழுச்சிப் பாடல்களைப் பாடியதால் இந்தியா வானொலி, தொலைக்காட்சியில் பல சந்தர்ப்பங்களை இழந்த தேனிசைச் செல்லப்பா நீண்டகாலமாக இலங்கையின் தமிழ் மக்களுக்காக தன்னால் இயன்ற பணிகளை மேற்கொண்டவராவார்.

## அதிகாரி யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு அமைச்சர் ஏ. எஸ். எஸ். அதிகாரி உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு எதிர்வரும் 22ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

படத்தைத் திரை நீக்கம் செய்து வைத்தார்.

பழைய யாழ்ப்பாண ராஜதானியான நல்லூரில் எழுச்சி நாள் விழா நேற்றுப் பிற்பகலில் ஆரம்பமான அதே சமயம் வரலாற்றுப் புகழ் மிக்க திருக்கோணமலையில்கோலாகலமாக நடந்த எழுச்சி நாள் விழாவிற்கு திருமலை மாவட்டப் பொறுப்பாளர் தலைமை வகிக்க விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ, மகேந்திரராசா (மாத்தயா), கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் மேடையில் வீற்றிருந்தனர். தமிழ் முஸ்லிம் மக்கள் ஊர்வலமாகப்பல பகுதிகளிலுமிருந்து வந்து இக்கூட்டத்தில் வெள்ளம்போல் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு நகரில் வெபர் மைதானத்தில் நேற்றுப் பிற்பகல் நடந்த எழுச்சி விழாவுக்கு மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் அன்னை பூபதியின் உருவப் படம் தாங்கிய கொடிகளையும் சுலோக அட்டைகளையும் தாங்கியபடி பெருந்

(6ஆம் பக்கம் பார்க்க)



நல்லூர் நோக்கி வந்த சிற்றூரவைப் பேரணியும், எழுச்சி விழாவில் அன்ரன் பாலசிங்கமும்

# எந்த நாட்டின் உதவியுமின்றி எமதுபோராளிகள் வென்றனர்

- அன்ரன் பாலசிங்கம்

(நல்லூர்)

எமது போராளிகளுக்கு எந்த ஒரு நாடும் உதவிவழங்காத நிலையில் உலகின் நான்காவது இராணுவத்துடன் போராடி வெற்றி கண்டுள்ளனர் என விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நல்லூர் எழுச்சி விழாவில் பேசும் போது தெரிவித்தார்,

உலக வரலாற்றில் போராட்டங்களுக்கு ஒரு பின்னணி நாடு இருந்து வந்துள்ளது வியட்நாமை எடுத்துக்கொண்டால் அதற்கு ரஷ்யாவினால் அனைத்து உதவிகளும் வழங்கப் பட்டிருந்தது சீனாவும் உதவியிருந்தது. அதேநேரம் ஐக்கிய நாடுகள் சபையின் பெருத்த அங்கீகாரமும் இருந்தது. இதன் மூலம் வியட்நாம் போராட்டம் சுலபமாக வெற்றியடைந்தது. ஆனால் எமது தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழ மக்களுக்காக இந்தியாவிற்கு எதிராக போராடி வெற்றி பெற்றுள்

(6ஆம் பக்கம் பார்க்க)

# தமிழரைத் துண்டாடும் பேச்சுக்கே இடமில்லை

- யோகி

(நல்லூர்)

''நாம் புதிய தலைமுறையினர் தமிழ் மக்களைத் துண்டாடும் எந்தவிதமான பேச்சுக்களுக்கும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை. எமது எதிர்காலச் சமுதாயத்தைக் கட்டி வளர்ப்பதற்கு ஏற்றவகையில் தீர்வு காண்பதிலேயே நாம் அக்கறை கொண்டுள்ளோம்'' என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொதுச்செயலாளர்யோகரெட்ணம் யோகி நேற்று நல்லூரில் நடைபெற்ற எழுச்சி விழாக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் மாகாண சபை நிர்வாகத்தை நாம் ஓர் இடைக்கால தீர்வாக மட்டுமே ஏற்றுக்கொண்டு தேர்தலில் போட்டியிடுகின்றோம். தமிழ்மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு தமிழீழமே என்ற கொள்கையிலிருந்து நாம் இம்மியளவும் விலகவில்லை என நாம் மக்களுக்கு உறுதி கூறுகின்றோம் எனவும் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் கடந்த கால தமிழ் மக்களின் அரசியற் தலைமைகள், தமிழ்

(6ஆம் பக்கம் பார்க்க)



தலைமையில் நடைபெற்றது.

இம்மகாநாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கணபதிப்பிள்ளை தில்லைநாதன் (ஈழவர் முன்னணி). தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க இணைப்பாளர் திரு. சிவபாதம் (சிவா) மற்றும் சகல திணைக்களங்களின் உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்,

அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் அங்கு பேசுகையில் கூறியதாவது:

பத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒதுக்கப்படும் நிதியாவது எமக்குத்தேவைப்

எமக்குக் கிடைத்த நிதியைக் கொண்டு வேலைகளை

(6ஆம் பக்கம் பார்க்க)

# வட - கிழக்கு மாகாணங்களுக்கு தமிழ் பொலிஸார் நியமனம்

## பாதுகாப்பு அமைச்சு நட்வடிக்கை

(மட்டக்களப்பு)

வட -கிழக்கு மாகாணங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்குஉடனடியாகப்போதிய அளவுத் தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர்களை அனுப்புவதற்கான நடவடிக்கைகளை பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டுள்ளது.

வட - கிழக்கு மாகாணத்திற்குவெளியேயுள்ள பொலிஸ் நிலையங்களில் பணி புரியும் தமிழ். முஸ்லிம் பொலிஸாரை இடமாற்றம் செய்வதன்மூலம் தற்போதுஇம்மாகாணங்களில் நிலவுகின்ற பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும்எனப்பாது

(6ஆம் பக்கம் பார்க்க)

# அம்பாறை திஸ்ஸபுர பகுதி தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள திஸ்ஸபுர எனும் சிங்களப் பகுதியில் வாழும் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கான நடவடிக்கைகளில் புலிகள் மக்கள் முன்னணி அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் திரு. காஸ்ரோ ஈடுபட்டு வருகின்றார்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட இனக்கலவரங்களால் இங்கு வாழ்ந்த பெருவாரியான தமிழர் குடும்பங்கள் உடமைகளை இழந்து மிகவும் கஷ்டமுற்ற நிலையில் வேறு இடங்களுக்குக்குடிபெயர்ந்தன

ஆனால் சில குடும்பங்கள் இன்னும் அங்கேயே வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கு பாதுகாப்பு

(6ஆம் பக்கம் பார்க்க)

# வன்முறையால் 94 கோடி ரூபா அரச உடைமைக்கு சேதம்

(கொழும்பு)

நெருக்கடி மிகுந்த காலப் பகுதியில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் அரசாங்கச் சொத்துகளுக்கு ஏற்பட்ட மொத்தச் சேதங்களை விளக்கும் அறிக்கையொன்றை புனர்வாழ்வு புனர் நிர்மாண சமூக நலத்துறை அமைச்சர் பி. எம். அதிகாரி அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளார்.

இதுவரை அமைச்சுக்களிடமிருந்து பெறப்பட்ட சுமாரான மதிப்பீடுகளின்படி மொத்தச் சேதம் தொண்ணூற்று மூன்று கோடியே ஐம்பத்தாறு இலட்சத்து அறுபதாயிரம் ரூபாவெனத் தெரிய வருகிறது.

அமைச்சரவைப் பேச்சாளரும் பெருந்தோட்டத்துறை அமைச்சரும் பாதுகாப்புத் துறை இராஜாங்க அமைச்சருமான ரஞ்சன் விஜரத்தினா இதனை தெரிவித்தார்.

இன்னமும் சரியான புள்ளி விபரங்கள் கிடைக்காததால் இறுதி மதிப்பீடு காலக்கிரமத்

(6ஆம் பக்கம் பார்க்க)

# அரச, எதிர்க்கட்சி எம்.பிக்களை சமனாக நடத்த வேண்டும்

(கொழும்பு)

அமைச்சர்கள், அரசாங்க எம். பிக்களுடனும், எதிர்க்கட்சி எம். பிக்களுடனும் சமமாக நடந்துகொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற அமைச்சர்களின் கூட்டத்தில் பேசும் போது கூறினார்.

தொடர்ந்து பேசிய ஜனாதிபதி, உத்தியோகபூர்வமாக எம். பிக்கள் இனிமேல் வெளிநாடுகள் செல்வது, நாட்டுக்

(6ஆம் பக்கம் பார்க்க)

# புனர்நிர்மாணத்தை மதிப்பிட ஐ. நா. குழு வடபகுதி விஜயம்

(யாழ்ப்பாணம்)

கடந்தகாலத்தில்வன்செயல் காரணமாக ஏற்பட்ட அழிவுகளையும் அந்த அழிவுகளுக்கு இதுவரை செய்யப்பட்ட புனர்வாழ்வு,புனர்நிர்மாணவேலைகள் பற்றியும் அத்துடன் வடபகுதியில் முறைசாராக் கல்வி அடைந்துள்ளவளர்ச்சிநிலைமை பற்றிஅறிந்து கொள்வதற்கும் உயர் மட்டக்குழு ஒன்று வட

(6ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி மாவட்டத்தில் சில அதிகாரிகள்

# சிறுபோக நீர் வழங்கலில் பாரபட்சம் விவசாயிகள் அரச அதிபரிடம் நேரில் புகார்

(கிளிநொச்சி)

சிறுபோக நெற்செய்கைக்கு நீர் வழங்குவதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பாரபட்சம் காட்டியதால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கும் அதிகமான விவசாயிகள் ஊர்வலமாகச் சென்று கிளிநொச்சி அரசாங்க அதிபரிடம் புகார் செய்துள்ளனர்,

கண்டாவளை 5ஆம், 6ஆம், 7ஆம், 8ஆம் வாய்க்காலைச் சேர்ந்த விவசாயிகளே இவ்வாறு ஊர்வலமாகச் கிளிநொச்சிக் கச்சேரிக்குச் சென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு, க. மாணிக்கவாசகரிடம் புகார் செய்துள்ளனர்,

கல்மடுக் குளத்திட்டத்திற்குக் கீழ் உள்ள கண்டாவளை வயலில் விவசாயத்தை மேற்கொண்டு வருகிறோம். கடந்த காலபோகத்தின்போது மழை குறைவாக இருந்தது. அப்

(6ஆம் பக்கம் பார்க்க)

ளார்.

இலங்கைத் தமிழருக்காக பல எழுச்சிப் பாடல்களைப் பாடியதால் இந்தியா வானொலி, தொலைக்காட்சியில் பல சந்தர்ப்பங்களை இழந்த தேனிசைச் செல்லப்பா நீண்டகாலமாக இலங்கையின் தமிழ் மக்களுக்காக தன்னால் இயன்ற பணிகளை மேற்கொண்டவராவார்.

# அதிகாரி யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு அமைச்சர் ஏ. எஸ். எஸ். அதிகாரி உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு எதிர்வரும் 22ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

# இவைகளுக்கு தடை விதிப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் செவன; அபிவிருத்தி லொத்தர், தேசிய லொத்தர் என்பன தமிழீழ விடுதலைப் புலிகளால் மறு அறிவித்தல் வரை தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மேலும் பல்கலைக்கழகப் புதிய அனுமதி பெற்றுள்ள மாணவர்கள் மீதான ராகிங் கைவிடப்பட வேண்டும் என்றும் புலிகள் அறிவித்துள்ளனர். (37)

# முத்தமிழ் கவி புனை அரங்கு

(யாழ்ப்பாணம்)

சித்தாந்தக் கலாநிதி க. கணபதிப்பிள்ளையின் முத்தமிழ் கவி புனை அரங்கு சனிக்கிழமை காலை 9 மணியளவில் நல்லை ஆதீனத்தில் நடைபெறும் புதுக்கவிதை, செய்யுள் நயமறிதல் என்பனவும் இதில் இடம் பெறும். இக் கவி புனை அரங்கு வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும்,

# மட்டக்களப்பில் நடமாடும் செயலகம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உதவி அரச அதிபர் பிரிவுகள் தோறும் நடமாடும் செயலகம் நடாத்த அரச அதிபர் திரு. ஆர்.யோகநாதன் முடிவு செய்துள்ளார்.

முதலாவது நடமாடும் செயலகம் எதிர்வரும் 28ஆம் திகதி வாகரையில் நடைபெறும்.

சகல திணைக்களங்களும் இதில் கலந்து கொள்ளுமென செயலக அதிகாரியொருவர் தெரிவித்தார். (37)

## வரிவிளம்பரம்

(நியூவீனஸ்) யாழ். நகரில் சிறந்த வீடியோ, ஓடியோ றெக்கோடிங்கிற்கும், ரி. வி. அன்ரனா இணைப்பிற்கும் மற்றும் சகலவிதமான ரி. வி. டெக், றேடியோக்கள், மணிக் கூடுகள், எலக்றோனிக் சாதனங்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள நாடவேண்டிய இடம்: NEW VENUS No: 60 Stanley Road, Jaffna. B/538

## விருப்பவேலக்கு

பரமேஸ் கோணேஸ் இசைக் குழுவின் முன்னணிப் பாடகர் வின்ரோ மகேந்திரா (சீப்பிரியன்) தொடங்கவிருக்கும் மெல்லிசைக் குழுவிற்கு Drums வாத்தியம் மீட்டுவதில் திறமையுள்ளவர் தேவை உடன் வரவும் 6. நவீனசந்தை மேல்மாடி. யாழ்ப்பாணம். 17 கோவில் வீதி, யாழ்ப்பாணம் (B417)

சீயாக்காய், பயறு, அரிசி வெந்தயம் ஆகிய நான்கு வகைப் பொருட்கள் அடங்கிய சீயாக்காய் பவுடர் எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் MGM. NO. 777 K. K. S. ROAD, JAFFNA. (B/746)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. நடராசா நேசராசா
(உரிமையாளர்; ஜேய்ஸ் பார்மஸி, பண்டத்தரிப்பு)

திதி: 19. 4. 1990

மலர்வு: 19- 9- 1959
உதிர்வு: 25- 3- 1988

அன்னாரின் ஆத்மசாந்திக்கு இறைவனை வேண்டி நிற்கும்

S. M. நடராசாவும், பாரியாரும் மற்றும் உற்றார், உறவினர்களும்

(R-415)

## அன்னை பூபதியின்

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்



ஈழத்தாய் விடிவிற்கு நல்வித்தாய்
இரு வீர மறவர்களைப் புறந்தந்தாய்!
வீரத்தாய் அம்மா நீ! தமிழிற்காய்,
வேங்கைகட்காய், மக்களுக்காய் ஊண் மறந்தாய்!
கூற்றமதாய் இங்கு வந்த இந்தியரின்
கொடுமைகளை உலகிற்கு அறிவித்தாய்
பூமித்தாய் தசாப்தத்துள் பெறவுள்ள
புதல்வியாம் தமிழீழ நாட்டிற்காய்
பூபதித்தாய்! அன்னை நீ உயிர் ஈந்தாய்
பூவுடலுள் தீ வைத்தாய்! அம்மா நீ தெய்வத்தாய்!

**ஹரன் ஜுவல்லர்ஸ்**
50, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

(B/635)

## நாளை அங்குரார்ப்பண கூட்டம்

வெளிவாரிப் பட்டதாரிகள் ஆசிரியர் சங்க அங்குரார்ப்பண கூட்டம் நாளை 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஸ்ரான்லி வீதி, பொன்ட் கல்வி நிலையத்தில் நடைறெவுள்ளது.

## பாடசாலை அபிவிருத்தி கருத்தரங்கு

(சாவகச்சேரி)

மட்டுவில் மகாவித்தியாலயத்தைச் சுற்றி சுற்றுமதில் அமைப்பதைத் தொடர்ந்து பாடசாலையை இரண்டாகப் பிரித்து பாடசாலை வளவின் நடுப்பகுதியால் செல்லும் சிவன் கோயில் வீதி, பாடசாலை வளவு எல்லைக்கு உட்பட்ட பகுதி மட்டும் மூடப்படும்.

அடுத்துள்ள பெரிய ஒழுங்கையை வீதியாக்கி சிவன் கோவில் றோட்டுடன் இணைத்து சேவை மேற்கொள்ளப்படும்.

பாடசாலை அபிவிருத்தி பற்றிய பொது மக்களும் தமிழீழ விடுதலைப் புலிகள் தென்மராட்சிப் பிரதேச பொறுப்பாளர்களும் இணைந்து நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் இவ்வாறு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

## யாழ்நகரில் இன்றைய சினிமா

**வின்ஸர்-யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

கடைசி சில தினங்கள்
**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.00, 6.45, 9.30
**கொடி பறக்குது**
(கலர்)
28.4.90 முதல்
அர்ஜுன் - சீதா
ஏவி. எம்மின்
சங்கர் குரு

7 வது வாரம்
**மனோகரா - (யாழ்)**
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

**ராஜா (யாழ்)**
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
105 நாள் வெற்றிநடை போடுகிறது
**ராஜாதி ராஜா**
(கலர்)

# MACK TRAVELS (PVT) LTD.

யாழ் மக்களே!

உங்கள் வெளிநாட்டு உறவினருடன் அல்லது நண்பர்களுடன் தொடர்புகொள்ள வேண்டுமா?

நாடுங்கள் **"மக் ரவல்ஸ்"** காரியாலயத்தை!

சகல வசதிகளுடன்
வெகுவிரைவில் ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

வெளிநாட்டில் இருந்து உங்களுடன் தொடர்புகொள்ள வேண்டுமாயின் மிகவும் குறைந்த கட்டணத்தில் அமைதியான சூழ்நிலையில்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1990- 05- 17 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. தற்காலிக உதவி விரிவுரையாளர்
   - தாவரவியல்
   - இரசாயனவியல்
   - கணிதமும்
   - புள்ளிவிபரவியலும்
   - விலங்கியல்
   - பௌதிகவியல்
2. தற்காலிக

## ஆறாம் ஆண்டுப் பிரவேசம்

### யா. காட்லி கல்லூரி, யா. மெதடிஸ்த பெண்கள் உயர்தர கல்லூரி

(பருத்தித்துறை)

1. 1989, டிசம்பர் 5-ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தியவர்கள் 25 - 4 - 1990 புதன்கிழமை காலை 10·00 மணிக்கு உரிய ஆவணங்களுடன் எம்மை கல்லூரியில் வந்துசந்திக்கவும்.
2. எமது கல்லூரிகளை முதலாவதாக தெரிவுசெய்த மாணவர்களுக்கு புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்ற புள்ளி வரிசையில் அனுமதி வழங்கப்படும்.
3. இதன்பின் ஏற்படும் வெற்றிடங்களை பிரதேச வேறுபாடுஇன்றி நிரப்ப ஓர் பகிரங்கப் போட்டிப் பரீட்சை 30-4-1990 திங்கட்கிழமை நடைபெறும்.

## முதலாம் இடம்

(களுவாஞ்சிக்குடி)

களுவாஞ்சிக்குடி நியூ ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் தனது 24ஆவது வருடாந்த விழாவை முன்னிட்டு கடந்த திங்கள் நடாத்திய பெண்களுக்கான எட்டுமைல் (களுவாஞ்சிக்குடியிலிருந்து ஆரம்பித்து கல்லாறு சென்று திரும்புதல்) சைக்கிள் ஓட்டப்போட்டியில் களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த 'வாவாச்சி, என்ற திருமணமான பெண் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

# யாழ் மக்களே!

**உங்கள் வெளிநாட்டு உறவினருடன் அல்லது நண்பர்களுடன் தொடர்புகொள்ள வேண்டுமா?**

நாடுங்கள் **"மக் ரவல்ஸ்"** காரியாலயத்தை!

சகல வசதிகளுடன்
வெகுவிரைவில் ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

வெளிநாட்டில் இருந்து உங்களுடன் தொடர்புகொள்ள வேண்டுமாயின் மிகவும் குறைந்த கட்டணத்தில் அமைதியான சூழ்நிலையில் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**இரவு நேரத்தில் தொலைபேசி இணைப்புக்கள் விரும்புபவர்களுக்கு எங்கள் காரியாலயத்தில் தங்குமிட வசதிகள் தரப்படும்.**

பிறநாட்டில் இருந்து உங்களுடன் தொடர்புகொள்ள விரும்புபவர்களின் தகவல்களை அவர்கள் சொன்ன மாத்திரத்தில் நேரடியாக உங்கள் வீட்டிற்கு விநியோகிக்கப்படும்.
தொடர்பு கொள்க.

| கொழும்பில் | யாழ்ப்பாணத்தில் |
|---|---|
| **QUICK COMMUNICATION AND TRAVELS**<br>379 - 1/1, 1st Floor,<br>Galle Road,<br>COLOMBO - 6.<br>FAX: 589424 Telephone: 589420- 3<br>Telex: 23051 QUICK CE | **MACK TRAVELS (PVT) LTD.**<br>No. 8, 1st Lane,<br>Point Pedro Road,<br>JAFFNA.<br>Telephone: 025 - 2846 - 2244 |

(B789)

---

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்-(வரையறுக்கப்பட்டது)

**127, காங்கேசன்துறை வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்.**

## கட்டிடத் திருத்த வேலைகளுக்கான கூறு விலை கோரல்

மேற்படி எமது சங்க தலைமை அலுவலகக் கட்டிடத்தில் உள்ள திருத்தங்கள் செய்வது தொடர்பாகச் செய்யப்பட்ட வேண்டிய மேசன் வேலை தச்சு வேலை, மின் இணைப்புப் பொருத்துதல், நீர் விநியோகம் செய்தல் ஆகிய வேலைகளுக்கு தகுதி வாய்ந்த கேள்விக்காரரிடமிருந்து கூறு விலைகள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்களுக்குப் பொது முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
17- 4- 1990

தலைவர்
யாழ். பல. நோ. கூ. சங்கம்.

(B/788)

---

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1990- 05- 17 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. தற்காலிக உதவி விரிவுரையாளர்
   - தாவரவியல்
   - இரசாயனவியல்
   - கணிதமும் புள்ளிவிபரவியலும்
   - விலங்கியல்
   - பௌதீகவியல்
2. தற்காலிக செய்முறை காட்டுனர்
   - தாவரவியல்
   - இரசாயனவியல்
   - விலங்கியல்
   - பௌதீகவியல்
3. தற்காலிக போதனாசிரியர்
   - கணிதமும் புள்ளிவிபரவியலும்

இவ்வாண்டில் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுபவர்களும் விண்ணப்பிக்க முடியும். இப்பல்கலைக் கழகத்தின் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களைப் பெற விரும்புவோர் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட 23 x 10 ச.மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்டசபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களின்மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

— பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990. 04. 18

(B/791)

---

## யா. காட்லி கல்லூரி, யா. மெதடிஸ்த பெண்கள் உயர்தர கல்லூரி

(பருத்தித்துறை)

1. 1989, டிசம்பர் 5-ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தியவர்கள் 25 - 4 - 1990 புதன்கிழமை காலை 10·00 மணிக்கு உரிய ஆவணங்களுடன் எம்மை கல்லூரியில் வந்துசந்திக்கவும்.
2. எமது கல்லூரிகளை முதலாவதாக தெரிவுசெய்த மாணவர்களுக்கு புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்ற புள்ளி வரிசையில் அனுமதி வழங்கப்படும்.
3. இதன்பின் ஏற்படும் வெற்றிடங்களை பிரதேச வேறுபாடுஇன்றி நிரப்ப ஓர் பகிரங்கப் போட்டிப் பரீட்சை 30-4-1990 திங்கட்கிழமை நடைபெறும்.
4. இப்பரீட்சைக்கு 1989-ஆம், டிசம்பர் 5-ஆம் ஆண்டு புலமைப் பரிசிற் பரீட்சைக்கு தோற்றத் தகைமை பெற்றிருந்த மாணவர் இற்றைவரை விண்ணப்பிக்காமல் இருந்தால் ரூபா 15/- கட்டணமாகச் செலுத்தி 28-04-1990 க்கு முன் விண்ணப்பிக்கவும்.
5. முன்னர் விண்ணப்பித்தவர்களும் புலமைப்பரிசில் பெற்றவர்களும் விண்ணப்பிக்க வேண்டாம். அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும்.
6. இப்பரீட்சை தொடர்பாக முன்பு பத்திரிகை வாயிலாக கொடுக்கப்பட்ட விளம்பரங்கள் மெ. பெ. உ. கல்லூரியில் நடத்தப்பட்ட பரீட்சைகள் இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றன.

| | |
|---|---|
| திரு. பொ. பாலசிங்கம்<br>அதிபர்<br>யா/ காட்லி கல்லூரி | திருமதி. ல. சந்திரசேகரம்<br>அதிபர்<br>யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர கல்லூரி. |

B/792

---

## அன்னை பூபதிக்கு எமது அஞ்சலிகள்



## குமரன் கிறீம் கவுஸ்

முள்ளியவளை — முல்லைத்தீவு

(B/795)

---

## முதலாம் இடம்

(களுவாஞ்சிக்குடி)

களுவாஞ்சிக்குடி நியூ ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் தனது 24ஆவது வருடாந்த விழாவை முன்னிட்டு கடந்த திங்கள் நடாத்திய பெண்களுக்கான எட்டு மைல்( களுவாஞ்சிக்குடியிலிருந்து ஆரம்பித்து கல்லாறு சென்று திரும்புதல்) சைக்கிள் ஓட்டப்போட்டியில் களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த 'வாவாச்சி, என்ற திருமணமான பெண் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

---

## இருதய மாற்று சிகிச்சை

(மாஸ்கோ)

அலெக்ஸான்திறா உஷலா கோவா என்ற மூன்று வயது சிறுமிக்கு வலேரி உஷாமாக என்ற அறுவை வைத்திய நிபுணர் இரண்டு வருடங்களுக்கு முன்பு மாற்று இருதயத்தைப் பொருத்தியதைத்தொடர்ந்து இதுவரை சோவியத் நாட்டில் 31 இருதய சத்திர சிகிச்சைகள் நடை பெற்றுள்ளன. இந்த மாற்றுச் சத்திர சிகிச்சைகளில் 16சத்திர சிகிச்சைகள் வெற்றியளித்துள்ளனவாம்.

---

## விளையாட்டுக்கழக பெயர் மாற்றம்

(வந்தாறு மூலை)

பத்து வருட காலமாக இயங்கி வந்த வந்தாறு மூலை மைடன்ஸ் விளையாட்டுக்கழகம் சிங்கோ விளையாட்டுக்கழகமாக பெயர் மாற்றப்பட்டுள்ளதாக சிங்கோ விளையாட்டு கழக திரு. ஆ. கிருபைராஜா தெரிவித்தார். (29)

---


## கைவிடப்பட்ட சைக்கிள்

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலகத்தில் இம்மாதம் ஐந்தாம் திகதியிலிருந்து அநாதரவான நிலையில் ஒரு துவிச்சக்கரவண்டி கைவீடப்பட்டுள்ளது. உரிமையாளர் கூடிய விரைவில் உரிய ஆவணங்களுடன் இதனை பெற்று கொள்ளும்படி யாழ் செயலக நிர்வாக அதிகாரி தெரிவிக்கிறார் (லே

# தட்சர் தென்னாபிரிக்கா போகக்கூடாது என்ற மண்டேலாவின் யோசனை

## லண்டனிலும் பிரிட்டோரியாவிலும் கிளம்பியுள்ள சர்ச்சை



(லண்டன்)

தென் ஆபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கை ஒழிக்கப் படும்வரை பிரித்தானிய பிரதம மந்திரி மார்க்கிரட் தட்சர் தென் ஆபிரிக்காவிற்கு விஜயம்செய்யக்கூடாது என்று நெல்சன் மண்டேலா கருத்து வெளியிட்டு இருக்கிறார்.

இவ்வாறு நெல்சன் மண்டேலா வெளியிட்ட கருத்தைத் தொடர்ந்து லண்டனிலும், தென் ஆபிரிக்காவிலும் பலத்த வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டுள்ளது.

பிரித்தானிய பிரதம மந்திரி மார்க்கிரட் தட்சரின் தென் ஆபிரிக்க விஜயம் எப்போது மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது அவரைப் பொறுத்த விடயம் என்று பிரித்தானிய அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

அதேபோல தென் ஆபிரிக்காவின் ஆளுங் கட்சியின் அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில், பிரித்தானிய அரசாங்கத்தின் பிரதம மந்திரிக்கு உத்தரவு பிறப்பிக்க தமக்கு தகுதி இருப்பதாக மண்டேலா கருதக் கூடாது என்று தெரிவித்தார்.

இதேவேளை லண்டனில் வெம்பிளி அரங்கில் திங்கள் நடந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட நெல்சன் மண்டேலா பின்வரும் கருத்துக்களை கூறினார்.

தென் ஆபிரிக்கா ஜனாதிபதி டி கிளார்க்கின் சீரமைப்புச் சலுகைக்காக பொருளாதார தடையை தளர்த்த வேண்டுமென்று பிரித்தானிய பிரதம மந்திரி மார்க்கிரட் தட்சர் கூறியதை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அதுபற்றி சமரசம் பேச இயலாது என்றும் குறிப்பிட்டார்.

தனது குறிக்கோள் தென் ஆபிரிக்காவில் மக்களுடைய ஆட்சி ஜனநாயக ஆட்சி ஏற்படவேண்டும் என்பதே என்றார். இவரது லண்டன் விஜயத்தின்போது பிரதம மந்திரி மார்க்கிரட் தட்சரை சந்திக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



## அணுவாயுத உற்பத்திக்கு சட்டவிரோத இறக்குமதி

(வாஷிங்டன்)

இந்தியா, பாகிஸ்தான், ஈராக் ஆகிய பலநாடுகள் தமது அணுவாயுத வல்லமையை அதிகரிப்பதற்காக சட்ட விரோதமாக ஆயுத உபகரணங்களை இறக்குமதி செய்கின்றன கடத்துகின்றன என்று அமெரிக்க ஆய்வு நிறுவனம் ஒன்று அறிவித்திருக்கிறது.

அனைத்துலக சமாதானத்திற்கான அமைதி நிறுவனம் என்ற இந்த தனியார் நிறுவனம் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

மேற்கு ஜேர்மனி போன்ற நாடுகளில் இருந்து அணுவாயுதங்கள் சட்ட விரோதமாக ஏற்றுமதி செய்யப்படுவதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## ஆனைக்கோட்டை பகுதியில் சட்டவிரோத மின்பாவனை

(சுதுமலை)

ஆனைக்கோட்டை கிராம சபை பிரிவுக்குட்பட்ட நவாலி சுதுமலை, சாவல்கட்டு, ஆனைக்கோட்டை ஆகிய பல இடங்களில் சட்ட விரோத மின் பாவனை அதிகரித்து வருகிறது.

இதனால் பல மின் உப நிலையங்கள் பாதிப்படையும் ஓர் அபாய சூழ்நிலை உருவாகி வருவதாக மின்னிணைப்பு ஊழியர்கள் அச்சம் தெரிவித்துள்ளார்கள்.

இதை விட சாவல்கட்டு பகுதியில் நீண்ட காலமாக ஒளி குறைந்த மின்சாரத்தையே இப்பகுதி மக்கள் பெற்று வருகிறார்கள்.

சுதுமலை பகுதியில் புதிதாக அமைக்கப் பட்ட ஒரு உபமின்நிலையம் சகல வேலைகளும் பூர்த்தியாகிய நிலையில் இருந்தும் இதை இயக்குவதற்கு மின்சார சபையிடமிருந்து அனுமதி கிடைக்காததினால் இந்த நிலையம் இயங்காமல் இருக்கிறது.

பொது மக்கள் நலன் விரும்பிகள் இச்சட்ட விரோத மின் பாவனையை நிறுத்த முன்வர வேண்டும் என்று மின்சாரப் பகுதியினர் கேட்டுக் கொள்சின்றார்கள். (19)

## முச்சக்கர வண்டிகள் அன்பளிப்பு

(கல்லாறு)

மட்டக்களப்புசமூகசேவைத் திணைக்களத்திற்கு கிடைத்த பன்னிரண்டு முச்சக்கர வண்டிகளில் இரண்டு மண்முனை ஒருவிற்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு ஒதுக்கப்பட்டது.

இவ்விரு வண்டிகளும் வலது குறைந்த களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த ஒருவருக்கும் அண்மையில் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. ஆர். யோகநாதனால் வைபவரீதியாக வழங்கப்பட்டது. (45)

## யாழ். மாவட்ட நிறுவை அளவைகளில் குறைகள் உள்ளதாகப் புகார்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சில வர்த்தகர்கள் பாவிக்கும் தராசுகள், படிகள், லீற்றர் அளவைகள் மூலம் பொதுமக்கள் கொள்வனவு செய்யும் பொருட்கள் நிறை குறைந்து காணப்படுவதாக புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இதனையடுத்து சகல வியாபாரிகளும் தமது தராசுகள், படிகள். லீற்றர் கொள்கலன்கள் மீற்றர்கள் என்பனவற்றிற்கு முத்திரையிட்டுக் கொள்ளுமாறு நிறுவைகள் திணைக்களப் பொறுப்பதிகாரி திரு. கா. நாகலிங்கம் அறிவித்துள்ளார்.

ஒரு கிலோ சீனியை வாங்கிச் சென்றால் நூற்றியம்பது கிராம் வரை குறைவாக இருப்பது சில கடைகளில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அதேபோல விறகுகாலைகளிலும் தேய்ந்த படிகள் காணப்படுகின்றன.

இதனால் அலுவலக நாட்களில் காலை 8-30மணி முதல் முத்திரையிடப்படும் எனவும் தவறாது வியாபாரிகள் இதற்கு ஒத்துழைப்புத் தருமாறும் அவர் கேட்டுக் கொண்டார்,

இவ்வாறு முத்திரையிடப் படாத வர்த்தகர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (24)

## நெடுந்தீவு - குறிகாட்டுவான் புதிய படகுச்சேவை ஆரம்பம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையிலான மோட்டார் படகுச் சேவை

இருந்து முதற்சேவையை தொடங்கியபடகினை, பெருந்தெருக்கள் அதிகார சபையின் வடபிராந்திய அத்தியட்சகர்

## மக்கள் முன்னணி வட்ட அவை

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மண்முனை (ஆரயம்பதி)வட்டஅவை அண்மையில் இ.கி.மி. பாடசாலை மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரமுகர் மாஸ்டர் அங்குரார்பணம்கெய்து வைத்தார்.

தலைவராக திரு. கே. கோணமலை செயலாளராக திரு. இ. குமாரசாமி ஆகியோர் தெரிவாகினர்.

வெல்லாவெளிவட்ட அவை கலைமகள் வித்தியாலய மண்டபத்தில் வெல்லாவெளிப் பிரதேசப்பொறுப்பாளர்நெல்சன் அங்குரார்பணம்செய்து வைத்தார்.

தலைவராகதிரு. த. மகாலிங்கம் செயலாலராக திரு. கே. கனகநாயகம் தெரிவாகினர். (37)

## ஏறாவூரில் புதுவருட நிகழ்ச்சி

(வந்தாறுமூலை)

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு ஏறாவூர் பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவு கலை, கலாசார விழா செங்

## அலவன்ஸ் வழங்கவில்லை

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடமை புரியும் ரயில் கடவை பாதுகாப்பு ஊழியர்களுக்கு இவ்வருடம் புத்தாண்டு அலவன்ஸ் வழங்கப்படவில்லை,

சகல அரச ஊழியர்களுக்கும் புத்தாண்டு அலவன்ஸ் வழங்கப்படும் போது நாம் புறக்கணிக்கப் பட்டுள்ளோம் என கடவை ஊழியர்கள் ஈழநாதத்துக்கு தெரிவித்தனர்.


மறைந்த மானிப்பாய் இந்து இளைப்பாறிய ஆசிரியர்

திரு. பொ. புவனேந்திரன்

அவர்களின்

100-ம் நாள் நினைவாக

பிறப்பு: 1929 அகால மரணம்: 12. 01. 1990

வீணாய் ஒருயிரை
வேட்டுச்களாற் பறித்த நரிக்கூட்டம்
தாமும் மனிதரெனத்
தலைநிமிர்த்தித் திரிகையில்
நாளை ஒரு தீர்ப்புரைக்கும்
அது
நாசத்தைக் கொன்றெரிக்கும்
வேளை ஒன்று விரைந்துவரும்
அதில்
வேஷங்கள் கலைந்துவிடும்
இனி
விஷமனிதர் சாம்ராஜ்யம்
விழுந்தழியும்

நடக்கும் நாசங்களை எல்லாம்
நாளும் பார்த்திருந்தும்
உறக்கம் ஏனிறைவா?
உனக்கும் கனிவிலையோ
உன்னடியிற் கைதொழுதோம்
உண்மைக்கும் மதிப்பிலையோ!

நண்பர்கள்

மானிப்பாய். 20. 4. 1990 B794



யாழ். மாநகர தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் (ம. ப.)
330, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

பதவி வெற்றிடங்கள்

1. கணக்காளர்;- குறியீடு 104-10 சம்பளம் 350—615 / 15x7-20x8

வயதெல்லை:- 30 தொடக்கம் 40 வரை

தகைமைகள் :-

அ. கூட்டுறவுப் பணியாளரின் 11ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்கு அல்லது கணக்காய்வு லிகிதர் பதவியிலான 02 வருடத்திற்கு குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 12ஆவது சம்பளத்திட்டத்திலான கணக்கு சம்பந்தமான பதவியில் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளரின் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத் துறையிலான 02 வருடத்திற்கு குறையாத அனுபவமும்.

அல்லது


## சவூதியில் சம்பளம் கேட்ட

மின் பாவனை அதிகரித்து வருகிறது.

## முச்சக்கர வண்டிகள் அன்பளிப்பு

(கல்லாறு)

மட்டக்களப்புசமூகசேவைத் திணைக்களத்திற்கு கிடைத்த பன்னிரண்டு முச்சக்கர வண்டிகளில் இரண்டு மண்முனை ஒருவிற்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு ஒதுக்கப்பட்டது.

இவ்விரு வண்டிகளும் வலது குறைந்த களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த ஒருவருக்கும் அண்மையில் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. ஆர். யோகநாதனால் வைபவரீதியாக வழங்கப்பட்டது. (45)

இதை விட சாவல்கட்டு பகுதியில் நீண்ட காலமாக ஒளி குறைந்த மின்சாரத்தையே இப்பகுதி மக்கள் பெற்று வருகிறார்கள்.

சுதுமலை பகுதியில் புதிதாக அமைக்கப் பட்ட ஒரு உபமின்நிலையம் சகல வேலைகளும் பூர்த்தியாகிய நிலையில் இருந்தும் இதை இயக்குவதற்கு மின்சார சபையிடமிருந்து அனுமதி கிடைக்காததினால் இந்த நிலையம் இயங்காமல் இருக்கிறது.

பொது மக்கள் நலன் விரும்பிகள் இச்சட்ட விரோத மின் பாவனையை நிறுத்த முன்வர வேண்டும் என்று மின்சாரப் பகுதியினர் கேட்டுக் கொள்கின்றார்கள். (19)

# சவூதியில் சம்பளம் கேட்ட இலங்கையர் வீடு திரும்பினர்

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான சவூதி அரேபியாவில் கம்பனிகளில் தொழில் செய்யும் இலங்கையர்களுக்கு ஒழுங்காகச் சம்பளம்மாதாமாதம் வழங்கப்படுவதில்லையாம். சம்பளத்தைக் கேட்டால் வீட்டுக்குத் திருப்பி அனுப்பி விடுகிறார்களாம். இதனால் இலங்கையர் பலர் சம்பளத்தை தருகிற நேரம் தரட்டும் என்று சங்கடமான நிலையில் தொழில் செய்து வருகிறார்கள்.

கொழும்பிலுள்ள முகவர் நிலையங்களில் சப் ஏஜென்டுகள் யாழ்ப்பாணத்தில் செயற்படுகின்றார்கள். இவர்கள் மூலம் தொழில் வாய்ப்புப் பெற்ற சிலருக்குத்தான் இக்கதி. ரூ. 35,000 முதல் ரூ. 40,000 வரை கொடுத்துத் தொழில் பெற்றவர்கள் திருப்பி அனுப்பப்பட்டால் வேறு வழி இல்லை யென்ற திரிசங்கு நிலையில் சவூதியில் வாழ்கின்றார்கள்.

# ஒரு கிராமத்தின் முன்னேற்றம் கல்வியிலேயே தங்கியுள்ளது

(மட்டக்களப்பு)

ஒரு கிராமம் முன்னேற்றமடைய வேண்டுமானால் அம் முன்னேற்றம் கல்வியில் தான் தங்கியுள்ளது.

மேற்கண்டவாறு வெல்லாவெளி கலைமகள் வித்தியாலயத்தில் பரீட்சையில் கூடுதல் புள்ளி பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய தலைமையக உதவி அரச அதிபர் திரு. இரா. நாகலிங்கம் கூறினார்.

கிராம அபிவிருத்தி சங்க தலைவர் திரு எஸ். பெரிய தம்பி இவ் விழாவிற்கு தலைமை வகித்தார்.

திரு நாகலிங்கம் மேலும் பேசுகையில் ஒரு கிராமம் கல்வியில் பின்தங்கியிருக்குமானால் அக் கிராமம் மக்கள் வாழ்க்கையிலும் பின் தங்கிய நிலைதான் காணப்படும். பெற்றோர். பிள்ளைகளை கல்வியில் ஆர்வப்படுத்த வேண்டும். இதன் மூலம் கிராமம் முன்னேற்றமடையும் ஆசிரியர் - மாணவர் - பெற்றோர் இணைப்பு பாடசாலை வளர்ச்சிக்கு அடிப்படையான தேவை என்றார்.

## ஆமைபிடிக்க கொல்லத்தடை

(யாழ்ப்பாணம்)

கடல்வாழ் உயிரினங்களை பாதுகாக்கும் முகமாக ஆமைகளைக் கொல்வதோ அன்றி உணவுக்காகப் பயன்படுத்துவதோ தடை செய்யப்பட்டுள்ளது என யாழ். மாநகர சபை அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறார்.

இச்சட்டம் சர்வதேச ரீதியில் அமுலில் இருப்பதாக அவர் கூறியதுடன் தற்போது எமது நாட்டில் திருட்டுத்தனமாக ஆமைகளைக் கொன்று இறைச்சியை விற்பனை செய்வது தற்போது சாதாரணமாக நிகழ்ந்து வருவதாகவும் அவர் கூறினார். (லோ)

வதாக புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இதனையடுத்து சகல வியாபாரிகளும் தமது தராசுகள், படிகள். லீற்றர் கொள்கலன்கள் மீற்றர்கள் என்பனவற்றிற்கு முத்திரையிட்டுக் கொள்ளுமாறு நிறுவைகள் திணைக்களப் பொறுப்பதிகாரி திரு. கா. நாகலிங்கம் அறிவித்துள்ளார்.

இதனால் அலுவலக நாட்களில் காலை 8-30மணி முதல் முத்திரையிடப்படும் எனவும் தவறாது வியாபாரிகள் இதற்கு ஒத்துழைப்புத் தருமாறும் அவர் கேட்டுக் கொண்டார்,

இவ்வாறு முத்திரையிடப்படாத வர்த்தகர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (24)

# நெடுந்தீவு - குறிகாட்டுவான் புதிய படகுச்சேவை ஆரம்பம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையிலான மோட்டார் படகுச் சேவையில் புதிதாக அண்மையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ''வலம்புரி, தனது முதல் நாள் சேவையை கோலாகலமாக ஆரம்பித்தது.

100 இருக்கைகளைக் கொண்ட படகில் மலசல கூட வசதிகளும் உள்ளன. குறிகாட்டுவான் துறைமுகத்தில் இருந்து முதற் சேவையை தொடங்கியபடகினை, பெருந்தெருக்கள் அதிகார சபையின் வடபிராந்திய அத்தியட்சகர் திரு. எஸ். பாலேந்திரா ஆரம்பித்துவைத்தார்.

தொழில் நுட்ப உத்தியோகத்தர் திரு. கே. சற்குணராசா உட்படப் பல அதிகாரிகளும் ஆரம்ப விழாவிற் கலந்து கொண்டனர்.

பொது மக்கள் மிக மகிழ்ச்சியோடு இங்கு பயணம் செய்கின்றனர்.

# கல்வி ராஜாங்க அமைச்சர் வவுனியாவுக்கு விஜயம்

(வவுனியா)

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாது விட்டால் அப் பெற்றோர்களுக்குத் தண்டனை வழங்கும் சட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி மனோகரி புலேந்திரன் திங்கட்கிழமை வவுனியா அரசாங்க அதிபர் காரியாலயத்தில் பல அதிகாரிகள் மத்தியில் பேசும்போது குறிப்பிட்டார்.

அரச நிர்வாகத்தில் அதிகாரிகள் அனைவரும் நேர்மையோடு பணிபுரிய வேண்டும். தமது தராதரத்தை விற்க எவரும் முனையக்கூடாது என்றும் அங்கு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், மாணவர்கள் மத்தியில் சமய அறிவு ஏற்படவேண்டும். இதற்கு ஆசிரியர்கள் சமய வகுப்புகளில் கவனமெடுக்க கல்வி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கணிதம், தமிழ் போன்ற பாடங்களில் விசேட சித்தி பெற்றவர்களுக்கு மட்டுமல்ல எந்தப் பாடங்களில் விசேட சித்தி பெற்றிருந்தாலும், அத் துறைகளுக்கான ஆசிரியர் நியமனம் வழங்க சட்டம் கொண்டுவரப்பட உள்ளது.

ஒவ்வொரு பாடசாலைத் தவணைகளிலும் ஒவ்வொரு மாணவர்களிடமிருந்தும் இருபது ரூபாவீதம் அறவிட்டு, லொத்தர் சீட்டிழுப்பு ஒன்று நடாத்தி அந்தந்தப் பகுதிப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கு உதவ அரசு ஆலோசித்து வருகிறது.

வவுனியா மாவட்டத்தில் விவசாயிகளுக்கு கடன் வழங்குவதில் வங்கிகள் அக்கறை எடுக்கவேண்டும். இங்கு விவசாயம் செய்யாதவர்களுக்கு விவசாயத்திற்குரிய கடன் வழங்குவது நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

வவுனியா மாவட்டப் பகுதி அதிகாரிகள் பலர் அமைச்சரைச் சந்தித்து, இங்குள்ள குறைபாடுகளை எடுத்துக் கூறினார்கள்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, வவுனியா வந்திருந்த அவர், ஈரப்பெரியகுளம் விகாரையில் நடைபெற்ற கூட்டத்திலும் கலந்துகொண்டு, அங்குள்ள பிரச்சினைகள் சம்பந்தமாக கலந்துரையாடினார்.

அமைச்சர் திருமதி மனோகரி புலேந்திரன், வன்னிப் பகுதி பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டதன்பின்பும், அமைச்சராக நியமிக்கப்பட்ட பின்பும் வவுனியாவிற்கான விஜயத்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

மலை செயலாளராக திரு. இ. குமாரசாமி ஆகியோர் தெரிவாகினர்.

வெல்லாவெளிவட்ட அவை கலைமகள் வித்தியாலய மண்டபத்தில் வெல்லாவெளிப் பிரதேசப்பொறுப்பாளர்நெல்சன் அங்குரார்பணம்செய்து வைத்தார்.

தலைவராகதிரு. த.மகாலிங்கம் செயலாலராக திரு. கே. கனகநாயகம் தெரிவாகினர். (37)

## ஏறாவூரில் புதுவருட நிகழ்ச்சி

(வந்தாறுமூலை)

தமிழ்,சிங்கள புத்தாண்டை முன்னிட்டு ஏறாவூர் பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவு கலை, கலாசார விழா செங்கலடி மெதடிஸ்த மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இவ்கலாசார விழா ஏறாவூர் பற்று உதவி அரசாங்க அதிபர் திரு. க. கனகஇரத்தினம் தலமையில் நடைபெற்றது. நடனம், நாடகம் நாட்டுப்பாடல் போட்டி, ஓரங்க நாடகம், வில்லுப் பாட்டு என்பன நடைபெற்றன.

விசேட நிகழ்ச்சியாக மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வித்துறையில் பெரும்பிரசித்தி அடைந்து விளங்கும் கவியரசு கவிஞர் கண்ணகிதாசன் என்று அழைக்கப்படும் மா. சோமலிங்கம், கவிஞர் புரட்சி கமால் ஆகியோர் பொன்னாடைபோர்த்திகௌரவிக்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன.

## செங்கலடியில் விளையாட்டுப் போட்டி

(வந்தாறு மூலை)

புத்தாண்டு பண்டிகையை முன்னிட்டு அன்னை பூபதியின் நினைவாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செங்கலடி சிற்றூர் கிளையினால்செங்கலடி மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் மாபெரும் விளையாட்டுப் போட்டி ஒன்றுநடைபெற்றது

இவ் விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக விடுதலைப்புலிகள்மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் திருகரிகாலன்கலந்துகொண்டு சிறப்பித்தார்.

52 மைல் சைக்கிள் ஓட்டம் 8 மைல் மரதன்ஓட்டம் பெண்களுக்கான 7 மைல் சைக்கிள் ஓட்டம்கயிறு இழுத்தல், வழுக்குமரம் ஏறல் இன்னும் பல நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.


யாழ்ப்பாணம்.

## பதவி வெற்றிடங்கள்

1. கணக்காளர்;- குறியீடு 104-10 சம்பளம் 350—615 / 15x7-20x8

வயதெல்லை:- 30 தொடக்கம் 40 வரை

தகைமைகள் :-

அ. கூட்டுறவுப் பணியாளரின் 11ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்கு அல்லது கணக்காய்வு லிகிதர் பதவியிலான 02 வருடத்திற்கு குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 12ஆவது சம்பளத்திட்டத்திலான கணக்கு சம்பந்தமான பதவியில் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளரின் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத் துறையிலான 02 வருடத்திற்கு குறையாத அனுபவமும்.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர் தரம்) / க. பொ. த. உயர்தரத்தில் கணக்கியலை உள்ளடக்கிய மூன்று பாடங்களிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல் தொடர்பான துறையில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம்,

2. லிகிதர்:- குறியீடு 302—13 சம்பளம் 225—395 / 10x7—12.50x8

வயதெல்லை :- 25 தொடக்கம் 40 வரை.

தகைமைகள்;-

அ. கூட்டுறவுப் பணியாளரின் 14ஆவது சம்பளத்திட்டத்தில் லிகிதர் பதவியில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. க, பொ, த, சாதாரண தரத்தில் எண்கணிதம் / வர்த்தககணிதம் / தூயகணிதம், தமிழ்மொழி என்பவற்றினை உள்ளடக்கியதான 5 திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி.

3. கிளைமுகாமையாளர்:- குறியீடு 208—14 சம்பளம் 195—345 / 10x10—12.50x4

வயதெல்லை:- 25 தொடக்க்ம் 40 வரை.

தகைமைகள்;-

அ. கூட்டுறவுப் பணியாளரின் 15ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடத்திற்கு குறையாத அனுபவம்,

அல்லது

ஆ. கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதர) பத்திரம் / க. பொ த. (சாதாரண தரத்தில்) 2 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம் / வர்த்தககணிதம் / தூயகணிதம், தமிழ்மொழி என்பவற்றினை உள்ளடக்கியதாக ஆறு பாடங்களிற் சித்தி

குறிப்பு:-

1. இக்குறியீடுளுக்குப் பொருத்தமான புதிய சம்பளத் திட்டத்தின்படி சம்பளமும், படிகளும் வழங்கப்படும்.
2. தற்போது இச்சங்கத்தில் பணியாற்றுபவர்களுக்கும், சங்க எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்களை தயாரித்து 5-5 90ற்கு முன்னர் ''தலைவர், யாழ். மாநகர தெங்கு பனம் பொருள் உ. வி. கூ. சங்கம், 330, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்''. என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

**தலைவர்**

யாழ். மாநகர தெ ப.பொ.உ,வி.கூ. சங்கம்
யாழ்ப்பாணம்

B797/

# வீரத்தாய் பூபதிக்கு



களத்தில் வீரவேங்கைகளின் வீரமரணங் கண்டு
வாழ்த்திய வீரத்தாய் உண்டு
வீரத்தாயே களத்தின் நிலை கண்டு
உயிர்தியாகித்த நிலை ஈழத்தில் தான் உண்டு

**முல்லை பிரதேச மாவட்ட மக்கள் அஞ்சலி**

# மயிலிட்டி சனசமூக நிலையம்



## முல்லை பிரதேச மாவட்ட மக்கள் அஞ்சலி

# மயிலிட்டி சனசமூக நிலையம்

வள்ளுவர் அறிவகம்
கண்ணகி சனசமூக நிலையம்
செல்வா சனசமூக நிலையம்
சென் மேரிஸ் சனசமூக நிலையம்
அம்பாள் சனசமூக நிலையம்
கலைவாணி சனசமூக நிலையம்
பூமகள் சனசமூக நிலையம்



அண்ணா சனசமூக நிலையம்
ஐங்கரன் சனசமூக நிலையம்
சென். அன்ரனீஸ் ச. ச. நிலையம்
இளங்கோ சனசமூக நிலையம்
ஞானசோதி சனசமூக நிலையம்
சேரன் சனசமூக நிலையம்
கெனடி சனசமூக நிலையம்

## அன்னை பூபதி



அன்னை பூபதி அம்மா! தாயே!
மட்டூர்தந்த மாமணி நீயே!
உன்னை நினைக்க உள்ளம் உருகுதே!
மண்ணகம் போற்றிய மக்கள் இருவர்
விண்ணகம் கண்டிட வேதனை கொண்டாய்
மனமே தளரா மணியே! பூபதி!
அண்ணல் காந்தி அஹிம்சை வழியில்
சத்தியாக்கிரகச் சத்திய ஒளியில்
மக்கள் துன்பம் மாற்ற நினைந்து
உன்னுடல் வெறுத்தாய் உண்ணாவிரதம்
ஒன்றினைக் கண்டாய் உலகம் வியக்க
அரசினை நோக்கி அன்போடவர்க்கு
"பேச்சுவார்த்தை பேசித் தமிழன்
பிரச்சினை தீர்த்திடு" "பேசு முன்பு
போரை நிறுத்து" என்று பொன் வார்த்தை
பேசிநின்ற பெண்ணாரணங்கே!
தமிழன் உள்ளம் தனியிடம் பெற்றாய்!
உன்னுரை மதிக்கா உலுத்தர்காண
இன்னுயிர் நீத்த எங்கள் தாயே!
திண்டோள் மறவர் தேவர் பரம்பரை
மயிலை மக்கள் மனங்கவர் மணியே
உன்புகழ் பரப்பி உலகோர் போற்ற
பத்தொடு ஒன்பது பகரும் பங்குனி
கைலை சேர்ந்து களிக்கின்றாயோ!
அன்னை பூபதி அன்புத்தாயே!!

## அன்புத் தாயே!



### சிந்தனைக்கு

துணிவுடையோர்க்கு, அதிர்ஷ்டம் துணை நிற்கும்

— வெர்நில்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 20 - 04 - 90

தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208

## கொண்டாட்டமல்ல சேவையே தேவை!

வடபிராந்திய போக்குவரத்துச்சபை போக்குவரத்து தினவிழாவொன்றைச் சமீபத்தில் நடத்தியது. இதில் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. யாழ். நகர பஸ் நிலையம் அன்று கலகலப்பாக இருந்தது.

உரிய நேரத்தில் வராத பஸ்களுக்காகக் கால் கடுக்க நிற்கும் பிரயாணிகளும் பஸ்ஸுக்காகக் காத்து நிற்கும் தாய்மாரின் தோளில் இடந்து பசியால் துடிக்கும் குழந்தைகளின் அழுகைக்கு இந்த நேரம் பார்த்து அவர்கள் முன் ஓசையிடும் ஐஸ்பழ, இனிப்பு வியாபாரிகள்.

இந்தக் கலகலப்புக்களையெல்லாம் தாண்டும் விதத்தில் போக்குவரத்துத் தினவிழா நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன என்று சொல்ல வேண்டும்.

யாழ்ப்பாண நகரப் புகையிரத நிலையம் கடந்த சில ஆண்டுகளின் பின் புகையிரத நிலையமாக உற்சாகத்துடன் செயல்படத் தொடங்கியிருக்கிறது.

இலங்கை இராணுவ நிலையமாகவும் பின்னர் இந்திய இராணுவத்தின் முக்கிய முகாமாகவும் இயங்கி வந்த யாழ்ப்பாண நகர புகையிரத நிலையத்தில் இப்பொழுது புகையிரதங்கள் வந்து தரித்துச் செல்கின்றன.

கொழும்பிலிருந்து மாலையில் புறப்படும் மெயில் ரயில் அதிகாலையில் யாழ். நகர் புகையிரத நிலையத்தை வந்தடைகிறது.

இதேபோல் காலையில் கொழும்பிலிருந்து புறப்படும் யாழ்தேவி பிற்பகலில் யாழ். நகர் வந்து சேருகிறது. காலையிலும் மாலையிலும் காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்குச் செல்லும் புகையிரதங்களும் யாழ். நகர் ரயில் நிலையத்தில் தரித்தே செல்கின்றன.

யாழ். நகர் ரயில் நிலையத்திலிருந்து யாழ். நகர் பஸ்நிலையத்துக்கு சுமார் ஒரு மைல் தூரம் நடந்து செல்ல வேண்டும்.

# சர்வதேச உறவு மாற்றங்களுக்கேற்ப

# இலங்கை வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் வேண்டும்

1990களில் நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் வெளியுலகம் எத்தகையது? எண்பதுகளில் அவதானித்த போக்குகளை அடிப்படையாக கொண்டு வருங்காலத்தை கணிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம். இன்றைய உலகில் இடம் பெற்றுவரும் அரசியல், பொருளாதார, சமூக மீளொழுங்குபடுத்தலின் பின்னணியில் வைத்து நாம் இவற்றை நோக்க முடியும்.

சொன்ன மாற்றங்கள் தாக்கங்களை எடுத்து வரும். இப்பொழுது "கம்யூனிச" பூச்சாண்டிக்கு இடமில்லை. இந்த "அபாயத்துக்கு" வளர்முக நாடுகள் இரையாக கூடும். அதனால் அவற்றுக்கு உதவி வழங்க வேண்டியுள்ளது என்ற அணுகுமுறை இப்பொழுது அவசியமில்லை. ஆகவே அப்பொழுது இந்நாடுகள் வடக்கிலிருந்து உதவியையும், முதலீட்டினையும் பெறு

கள் செயற்பட முடியும். ஆக, வெளிநாடுகளில் வாழும் இலங்கையர் எங்களுக்கு எதிராகவன்றி எங்கள் சார்பாக எங்களுடன் இணைந்த வகையில் பணியாற்றக்கூடிய ஒரு சூழ்நிலையைக் கட்டியெழுப்புவது 90களில் எமது முதன்மை நோக்கங்களில் ஒன்றாக இருக்கிறது.

மேற்சொன்ன அமைவின் பின்னணியில் எமது உத்தி, எமது வெளிநாட்டுக் கொள்கை எதுவாக இருக்க வேண்டும்? சில விரிவான தெரிவுகள் எம்முன் உண்டு. முடியுமான உச்சமட்டத்தில் முதலீடு, உதவி வியாபாரம் என்பவற்றைப் பெற்றுக் கொள்வது ஒன்று. இதற்காக அனைவருடனும் நாங்கள் நட்புறவு பாராட்ட வேண்டும். கடந்த காலத்தில் உலகம் இரு வல்லரசுகளுக்கிடையில் பிரிவுபட்டிருந்தபோது அணிசேராமையே இதற்கான வழியாக இருந்தது. இப்பொழுது ஒருவகையில் அணிசேராமை பொருத்தமற்றிருக்கும் இன்றைய சூழ்நிலையில் நாங்கள் எத்தகைய பங்கினை ஆற்றுவது? சர்வதேச ரீதியில் எமது நிலைப்பாட்டை நாங்கள் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

சர்வதேச மன்றங்களில் எமது வாக்கினை நாம் பாவிப்பது எங்ஙனம்? இந்த விஷயத்தில் நாங்கள் ஈட்டும் உதவியில் தங்கியிருந்து அதன்படி தீர்மானங்களை எடுக்கக் கூடாது. உதவி உறவுகளில் இருந்து அப்பால் செல்லவேண்டும். உதவி, உறவுகள் எமது சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தக்கூடியவை. பனாமா, கிரனாடா படையெடுப்புக்களின் போது நடந்த சம்பவங்கள் நல்ல உதாரணங்கள். அத

**இலங்கையின் முன்னைநாள் ஏழு பிரதமர்களின் செயலாளராக இருந்தவரும், லண்டனில் உள்ள வெளிவிவகார ஆய்வு நிலையத்தில் கடமையாற்றியவரும் இன்று பிரேமதாசாவின் வெளியுறவுக் கொள்கை ஆலோசகருமான பிரட்மன் இக்கட்டுரையின் ஆசிரியராவர்.**

அரசியல் அரங்கிலோவெனில் கெடுபிடியுத்தம் முடிவடைந்து பலம் பொருந்திய வல்லரசுகளுக்கிடையிலான மோதல் நிலைநின்று போயிருக்கிறது. ஆயுதக்குவிப்பு மற்றும் வல்லரசுகளுக்கிடையிலான அதிகரித்த தொடர்பு வியாபாரம்என்பவற்றில் இது எதிரொலிகளை ஏற்படுத்த வல்லது. வடக்குக்கும் கிழக்குக்கும் இடையிலான உறவுகளின் முழு இயல்புகளிலும் அது தாக்கங்களை எடுத்து வர முடியும். இதன் விளைவாக 90 களில் வடக்கை நோக்கியிருக்க வேண்டிய ஒரு போக்கு நிலவ முடியும். காரணம் வடக்கு முக்கியத்துவம் பெற்றிருப்பதாகும். தெற்கைப்பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருக்க முடியாது. கிழக்கைரோப்பிய நாடுகள் வார்ஸா உடன்படிக்கையிலிருந்து விலகிச் சென்று தாமாகவே அணிசேரா நாடுகளாக மாற முடியும். மேற்கைரோப்பாவையும் கிழக்கைரோப்பாவையும் உள்ளடக்கி புதிய ஒரு ஐரோப்பிய அணி உருவாகலாம். இதன் விளைவாக பலம் பொருந்திய ஐரோப்பாவைக் கொண்ட மேற்குலகொன்று எழுச்சியடைய வாய்ப்பிருக்கிறது. பின் பசுபிக் விளிம்புக் கோட்பாடு எழுச்சி கண்டு இரு கொரியாக்கள் ஜப்பான், தாய்வான், சீனா, அவுஸ்திரேலியா, நியூசிலந்து [illegible]

வதற்கு வேறு வழிகளை நாட வேண்டியிருக்கிறது. (குறிப்பாக இனப்பிரச்சினைகளின் எழுச்சி, வறுமைப்பெருக்கம் போன்ற) தமது சொந்தச் சமூகங்களில் மேலைத்தேய நாடுகள் அதிகளவு கவனம் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் இப்பொழுது ஏற்பட்டுள்ளது. இப்பொழுதே இதற்கான அடையாளங்கள் தெரியத் தொடங்கியிருக்கின்றன. இதனால் வறிய நாடுகளுக்கு உதவும் அவற்றின் ஆற்றல் குறைவடையக்கூடும்.

இவ்விதமாக வளர்ச்சிகண்டு வரும்புதிய சர்வதேசசூழ்நிலையில் நாங்கள் அதிகமதிகமாக, புதிய அணிகளைக் கொண்ட மையங்கள் மீதே கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. பாரம்பரிய மையங்களை விட்டுவிட்டு, இனிமேல் உதவி, முதலீடு மற்றும் சந்தைகள் என்பவற்றுக்காக இப்புதிய

## பிரட்மன் வீரக்கோன்

கூட்டுக்களையே நாங்கள் நாட வேண்டியிருக்கும்.

இந்தப் புதிய தசாப்தத்தில், உலகின் பல்வேறு பாகங்களிலும் வாழும் இலங்கையர் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் தொழில்செய்து வரும் குடிபெயர்ந்த இலங்கையர் மீது நாங்கள் விசேஷ கவனம் செலுத்த வேண்டியிருக் [illegible]

னால் நாங்கள் பெருமளவில் உதவியில் தங்கியிருக்கும் நிலையைத் தவிர்த்து, வர்த்தகத்தில் தங்கியிருக்கும் நிலையை கட்டியெழுப்பிக் கொள்ள வேண்டும்.

மற்றொரு விஷயம், பெரிய வல்லரசுகளை ஒன்றுக்கு எதிராக மற்றதைத் தூண்டிவிடும் விளை[illegible]

**90 களில் வடக்கை நோக்கியிருக்க வேண்டிய ஒரு போக்கு நிலவ முடியும். காரணம் வடக்கு முக்கியத்துவம் பெற்றிருப்பதாகும். தெற்கைப் பற்றிக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கமுடியாது. கிழக்கைரோப்பிய நாடுகள் வார்ஸா உடன்படிக்கையிலிருந்து விலகிச்சென்று தாமாகவே அணிசேரா நாடுகளாக மாறமுடியும். மேற்கைரோப்பாவையும் கிழக்கைரோப்பாயையும் உள்ளடக்கி புதிய ஒரு ஐரோப்பியஅணி உருவாகலாம். இதன் விளைவாக பலம்பொருந்திய ஐரோப்பாவைக் கொண்ட மேற்குலகொன்று எழுச்சியடைய வாய்ப்பிருக்கிறது. பின் பசுபிக் விளம்புக் கோட்பாடு எழுச்சிகண்டு இரு கொரியாக்கள் ஜப்பான், தாய்வான், சீனா, அவுஸ்திரேலியா, நியூசிலந்து, இந்தோனேசியா ஆகிய நாடுகள் ஒன்றுபட்டு இணையும் ஒரு காட்சி தோன்றக்கூடும.**

குறிப்பாக பெரியளவில் இராணுவ பலம் எதுவுமில்லாத சிறிய நாடுகள் நண்பர் மற்றும் அயலவர்களுடன் உறவுகளை எவ்வாறு பேணுவது என்ற விஷயத்தில் மிகக கரிசனையுடன் செயற்படுதல் அவசியம் அதனால் 90 களில் எமது இந்தியக் கொள்கை அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கப் போகிறது.

தானுடன் எமது உறவு எவ்விதம் அமையும்? வரும் தசாப்தத்தில் நாங்கள் சந்திக்க வேண்டியிருக்கும் பிரதான பிரச்சினைகள் இவை.

குறிப்பாக சந்தைவசதிகள் போன்றவற்றை வழங்குவதில் இந்தியா ஓரளவு ஆற்றல்களைக் கொண்டிருக்கிறது. இந்த வாய்ப்புக்களை வியா

**இலங்கை தனக்குப் பொருத்தமான வெளியுறவுக் கொள்கை வகுத்துக் கொள்ளவேண்டும் என்று கூறும் கட்டுரை ஆசிரியர் இதுவரை காலமும் மாறிவரும், இனிமேல் ஏற்படப்போகும் புதிய சர்வதேச அரசியல் சூழல்களையும் விளக்க முற்படுகிறார். புதிய பிராந்திய அரசியல் சார்ந்த உறவும் எதிர்காலத்தில் முக்கியத்துவம் அடையும் என்றும், வர்த்தகம் வெளியுறவுக் கொள்கையில் முக்கிய பங்கெடுக்கும் என்று கூறும் இவ் ஆசிரியர் இவ்வடிப்படையில் இலங்கையின் வெளி உறவுக் கொள்கை வகுக்கப்படவேண்டும் என கூறுகின்றார்.**

இப்பொழுது சமத்துவமற்ற ஓர் ஏற்பாடு என்று கருதப்படும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை தவிர்த்து இந்தியாவுடன் நட்புறவு ஒப்பந்தமொன்றை நாங்கள் ஏற்படுத்திக் கொள்வது எப்படி? நாம் இந்தியாவுடன் நட்புறவு உடன்படிக்கையொன்றை வைத்துக்கொண்டால் அடுத்த பிரதான நாடான பாகிஸ்

பாரம் மற்றும் கூட்டு முயற்சிகள் என்பவற்றுக்கூடாக முழு அளவில் நாங்கள் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய விதத்தில் இந்தியாவுடன் உறவுகளைக் கட்டியெழுப்புவது மிக முக்கியமானது என எண்ணுகிறேன்.

இலங்கையைப் பொறுத்த வரையில் 90 கள் மீளமைப்புக்

(6ஆம் பக்கம் பார்க்க

இலங்கை இராணுவ நிலையமாகவும் பின்னர் இந்திய இராணுவத்தின் முக்கிய முகாமாகவும் இயங்கி வந்த யாழ்ப்பாண நகர புகையிரத நிலையத்தில் இப்பொழுது புகையிரதங்கள் வந்து தரித்துச் செல்கின்றன.

கொழும்பிலிருந்து மாலையில் புறப்படும் மெயில் ரயில் அதிகாலையில் யாழ். நகர் புகையிரத நிலையத்தை வந்தடைகிறது.

இதேபோல் காலையில் கொழும்பிலிருந்து புறப்படும் யாழ்தேவி பிற்பகலில் யாழ். நகர் வந்து சேருகிறது. காலையிலும் மாலையிலும் காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்குச் செல்லும் புகையிரதங்களும் யாழ். நகர் ரயில் நிலையத்தில் தரித்தே செல்கின்றன.

யாழ். நகர் ரயில் நிலையத்திலிருந்து யாழ். நகர் பஸ்நிலையத்துக்கு சுமார் ஒரு மைல் தூரம் நடந்து செல்ல வேண்டும்.

அதிகாலையில் யாழ். ரயில் நிலையம் வந்து சேரும் மெயில் ரயிலில் வந்து இறங்குவோரில் பெரும்பாலானவர்கள் தீவுப்பகுதிகளுக்கும், காரைநகர், மானிப்பாய், சங்கானை, நீர்வேலி, புத்தூர் போன்ற தூர இடங்களுக்கும் செல்பவர்கள் என்று சொல்ல வேண்டும்.

ரயில் நிலையத்திலிருந்து மூட்டை முடிச்சுக்களுடனும் குழந்தை குட்டிகளுடனும் பஸ் நிலையத்துக்கு நடந்து செல்வது இந்தியப்படையின் சோதனை முகாம் முன்பாக நடந்து செல்வது போன்ற இயமவேதனை!

ரயில் நிலையத்திலிருந்து பஸ் நிலையத்துக்கு வாடகைக்கார்களோ, 'ஒட்டோ'க்களோ 'சவாரி'க்கு வரமாட்டா! அப்படித்தான் வந்தாலும் கட்டணம் மிக அதிகமாக இருக்கும்.

இந்தப் பிரயாணிகளின் கஷ்டத்தை போக்குவரத்துச் சபை நிச்சயமாக நீக்க முடியும்.

அதிகாலை நாலரை மணிக்கு மூன்று நான்கு பஸ் வண்டிகளை ரயில் நிலையத்திலிருந்து பஸ் நிலையத்துக்கு சேவைக்கு அமர்த்துவதன் மூலம் பிரயாணிகளின் கஷ்டத்தை நீக்கலாம்.

ரயில் நிலையத்திலிருந்தே புங்குடுதீவு, ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, நீர்வேலி, புத்தூர் போன்ற இடங்களுக்கு பஸ் சேவைகளை நடத்துவதன் மூலம் பிரயாணிகளின் கஷ்டத்தைப் போக்குவதுடன் அதிக வருமானத்தையும் போக்குவரத்துச்சபை ஈட்டவும் வாய்ப்புண்டு.

இவை தவிர யாழ். பஸ் நிலையத்திலிருந்து புகையிரத நிலையம், யாழ். செயலகம், நல்லூர் கல்விக் கந்தோர், நல்லூர் மாநகரசபை, நல்லூர் கந்தசாமி கோவில் வழியாக மீண்டும் பஸ் நிலையத்துக்கு ஒரு மணி நேரத்துக்கு ஒரு பஸ் என்று நகர பஸ் சேவையை நடத்துவது பொதுமக்களுக்குச் செய்யும் பெரும் சேவையாக அமையும்; வருமானமும் அதிகரிக்கும்.

பஸ்கள் இல்லை என்று சொல்வது ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணமல்ல என்பதை முன்கூட்டியே சொல்லிவைக்க விரும்புகிறோம்.

---

போக்கு நிலவ முடியும். காரணம் வடக்கு முக்கியத்துவம் பெற்றிருப்பதாகும். தெற்கைப்பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருக்க முடியாது. கிழக்கைரோப்பிய நாடுகள் வார்ஸா உடன்படிக்கையிலிருந்து விலகிச் சென்று தாமாகவே அணிசேரா நாடுகளாக மாற முடியும். மேற்கைரோப்பாவையும் கிழக்கைரோப்பாவையும் உள்ளடக்கி புதிய ஒரு ஐரோப்பிய அணி உருவாகலாம். இதன் விளைவாக பலம் பொருந்திய ஐரோப்பாவைக் கொண்ட மேற்குலகொன்று எழுச்சியடைய வாய்ப்பிருக்கிறது. பின் பசுபிக் விளிம்புக் கோட்பாடு எழுச்சி கண்டு இரு கொரியாக்கள் ஜப்பான், தாய்வான், சீனா, அவுஸ்திரேலியா, நியுசீலந்து, இந்தோனேசியா ஆகிய நாடுகள் ஒன்று பட்டு இணையும் ஒரு காட்சி தோன்றக் கூடும்.

ஆக இந்தப் பின்னணியில் இலங்கை அதற்கான வெளிநாட்டுக் கொள்கையை வகுத்துக் கொள்வது எப்படி? இந்தகு சூழலொன்றில் அதன் முதன்மைநோக்கங்கள் எவை? நாங்கள், 90 களில் நுழையும் இவ்வேளையில் எம்முன் இருக்கும் முக்கியமான பிரச்சினை இது. வடக்குக்கும் தெற்குக்கும் உதவி தொடர்பான உறவுகளில் மேற்

யில் நாங்கள் அதிகம்அதிகமாக, புதிய அணிகளைக் கொண்ட மையங்கள் மீதே கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. பாரம்பரிய மையங்களை விட்டுவிட்டு, இனிமேல் உதவி, முதலீடு மற்றும் சந்தைகள் என்பவற்றுக்காக இப்புதிய

## பிரட்மன் வீரக்கோன்

கூட்டுக்களையே நாங்கள் நாட வேண்டியிருக்கும்.

இந்தப் புதிய தசாப்தத்தில், உலகின் பல்வேறு பாகங்களிலும் வாழும் இலங்கையர் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் தொழில்செய்து வரும் குடிபெயர்ந்த இலங்கையர் மீது நாங்கள் விசேஷ கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. இலங்கை உருவாக்கிக் கொள்ள வேண்டிய பிம்பம், இவர்கள் மூலமாகவே வெளி உலகுக்கு எடுத்துச் செல்லப் பட வேண்டும். அவர்களை நாங்கள் சென்றடைவது எப்படி? இச்செய்தியை எடுத்துச் செல்வதற்கு வேண்டிய சாதனங்களை அவர்களுக்கு வழங்குவது எப்படி? அந்த நாடுகளில் இயங்கும் குரல் எழுப்பும் குழுக்கள் மற்றும் தொடர்பு சாதனங்களைச் சேர்ந்தோர் என்போருடன் தொடர்புகளை ஸ்தம்பித்துக் கொள்ளும் குழுக்களாக இவர்

கூடாது. உதவி உறவுகளில் இருந்து அப்பால் செல்லவேண்டும். உதவி, உறவுகள் எமது சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தக்கூடியவை. பனாமா, கிரனாடா படையெடுப்புக்களின் போது நடந்த சம்பவங்கள் நல்ல உதாரணங்கள். அதனால் நாங்கள் பெருமளவில் உதவியில் தங்கியிருக்கும் நிலையைத் தவிர்த்து, வர்த்தகத்தில் தங்கியிருக்கும் நிலையை கட்டியெழுப்பிக் கொள்ள வேண்டும்.

மற்றொரு விஷயம், பெரிய வல்லரசுகளை ஒன்றுக்கு எதிராக மற்றதைத் தூண்டிவிடும் விளையாட்டும் இனிமேல் வெற்றி காணப்போவதில்லை என்பது. அதுமட்டு ல்லாமல் ஒருசிறிய நாடு பெரிய வல்லரசொன்றினால் ஆக்கிரமிக்கப்படும்போது விசேஷ உறவுகள் காரணமாக அதில் வேறொரு நாடு தலையிடும் என்று இனி நம்பிக்கொண்டிருப்பதற்கும் சாத்தியங்கள் இல்லை. பனாமாவில் நடந்தது இதனைத் தெளிவாக்குகிறது. எதிர்காலத்தில் நமது நடவடிக்கைகள் அனைத்தும் சர்வ ஜாக்கிரதையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனையே இது காட்டுகிறது. இனி இலகுவழி ஒன்றுமில்லை; உங்களுக்கு உதவுவதற்கு யாரும் வரப்போவதில்லை; அதனால் உதவிகோரி குரல் எழுப்ப வேண்டிய அவசியம் வராதவிதத்தில் நீங்கள் உங்கள் நடவடிக்கைகளை ஒழுங்படுத்திக் கொள்ளவேண்டும். எங்களுக்கு உதவி புரியக்கூடிய பல பிராந்திய நண்பர்களையும் நாங்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டும். தொண்ணூறுகளில் அத்திசையை நோக்கி நாங்கள் சென்று கொண்டிருக்கிறோம் என்று நான் நினைக்கிறேன். குறிப்பாக, பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளுடன் நாங்கள் விஷேச உறவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

முன்னைய கருத்தில் பிரதான பிரிவுகள் எதனுடன் சேராதிருந்தமையே அணிசேராமை என்று கருதப்பட்டது. அந்தப் பிரிவுகளெல்லாம் அடிபட்டுப் போயிருக்கிற இன்றைய நிலையில் அணி சேராமையின் பொருள் என்ன? அணி சேரா இயக்கம் இப்பொழுது இப் பிரச்சினையை எதிர் கொள்கிறது என நான் நினைக்கிறேன்.

எந்த ஒரு நாட்டினதும் வெளிநாட்டுக் கொள்கையின் முதன்மையான குறிக்கோள் சுதந்திரம் இறைமை தன்னாதிக்கம் என்பவற்றைப் பாதுகாத்துக் கொள்வதாகும்.

உறவும் எதிர்காலத்தில் முக்கியத்துவம் அடையும் என்றும், வர்த்தகம் வெளியுறவுக் கொள்கையில் முக்கிய பங்கெடுக்கும் என்று கூறும் இவ் ஆசிரியர் இவ்வடிப்படையில் இலங்கையின் வெளி உறவுக் கொள்கை வகுக்கப்படவேண்டும் என கூறுகின்றார்.

இப்பொழுது சமத்துவமற்ற ஓர் ஏற்பாடு என்று கருதப் படும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை தவிர்த்து இந்தியாவுடன் நட்புறவு ஒப்பந்தமொன்றை நாங்கள் ஏற்படுத்திக் கொள்வது எப்படி? நாம் இந்தியாவுடன் நட்புறவு உடன்படிக்கையொன்றை வைத்துக்கொண்டால் அடுத்த பிரதான நாடான பாகிஸ்தான் பாரம் மற்றும் கூட்டு முயற்சிகள் என்பவற்றுக்கூடாக முழு அளவில் நாங்கள் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய விதத்தில் இந்தியாவுடன் உறவுகளைக் கட்டியெழுப்புவது மிக முக்கியமானது என எண்ணுகிறேன்.

இலங்கையைப் பொறுத்த வரையில் 90 கள் மீளமைப்புக்

(6ஆம் பக்கம் பார்க்க

---

இரிக்கெட் போட்டியில்

# பந்து மாயமாக மறைந்தது வெற்றி தோல்வியின்றி முடிவு

(யாழ் விளையாட்டு நிருபர்)

நல்லூர் முத்திரைச் சந்தை சங்கிலியன் அரசன் விளையாட்டுக் கழகத்திற்கு நாயன்மார்க்கட்டு விளையாட்டுக் கழகத்துக்கு மிடையில் நடைபெற்ற15 ஓவர் மென்பந்து கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வி யின்றி முடிவுற்றது.

செல்வராஜா இராஜ்குமார் சங்கிலியன் அரசன் விளையாட்டுக்கழக சார்பில் மிகவும் சிறந்த முறையில் விளையாடி 56 ஒட்டங்களைப் பெற்றார்.

இதில் 3சிக்சர்களும் 6பவுண்டறிகளும் அடங்கியுள்ளன.

முதலில் துடுப்பெடுத்தாடிய நாயன்மார்க் கட்டு விளையாட்டுக் கழகம் 15 ஓவர்களில் 103 ஓட்டங்களைப் பெற்றது.

சங்கிலியன் அரசன் விளையாட்டுக் கழகம் 11.2ஓவர்களில் 89 ஓட்டங்களை மிகவும் வேகமாக. பெற்றனர்.

செல்வராஜா இராஜ்குமார் மிகவும் சிறபபாக விளையாடிக் கொண்டிருக்கும் போது அவருக்கு எதிராக பந்து வீசிய போது ஒரு சிக்சரை அடித்துள்ளார். அடித்த பந்தை தேடும் போது பந்து மாயமாய் மறைந்ததினால் போட்டியை நிறுத்த வேண்டிய கட்டம் நோந்தது.

சங்சிலியன் அரசன் விளையாட்டுக் கழகம் வெற்றியை ஈட்டும் வாய்ப்பை இழக்க நேர்ந்தமையால் போட்டியை வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. என தீர்மாணிக்கப் பட்டது. (42)

---

# கிரிக்கெட் போட்டியில் இந்து ஆசிரியர் கழகம்வெற்றி

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியர் கழகத்திற்கும் யாழ் பல்கலைக்கழகஆசிரியர்அணிக்கும் இடையே நடைபெற்ற சினேக பூர்வமான 20 ஓவர் மென்பந்து கிரிக்கெட்போட்டியில் யாழ் இந்து ஆசிரியர் கழக அணி 22 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் இந்து ஆசிரியர் கழக அணி 19 ஓவர்களில் 73 ஓட்டங்களைப் பெற்றது: ரி.சிவகுமாரன் 34 ஓட்டங்களையும் என். ஸ்ரீகாந்தா 10 ஓட்டங்களையும் பெற்றனர். எதிர்த்துப் பந்து வீசிய கே. முரளி 8 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் எஸ். அருள்வேல் 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப் பற்றினார்.

அடுத்து ஆடிய யாழ் பல்கலைக் கழக ஆசிரியர் அணி 9 ஓவர் 51 ஓட்டங்களையே பெற்று ஆட்டமிழந்தது. ஏ. அம்பிகுமார் 15 ஓட்டங்களையும் எஸ் ராஜேஸ்வரன் 10 ஓட்டங்களையும் பெற்றனர்

எதிர்த்து பந்து வீசிய எஸ். ரட்ணசபாபதி 3 ஓட்டங்களுக்கு 4விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்.

பல்கலைக்கழக மைதானத்தில் இடம் பெற்ற இப்போட்டிக்கு திரு. மனோரஞ்சன் திரு. வரதராஜன் ஆகியோர் மத்தியஸ்தராக கடைமையாற்றினர். (42)

---

## வீதியின் அவலநிலை சீராகுமா?

ஆசிரியர்,
ஈழநாதம்.

பொலிகண்டி, நவிண்டில் ஆகிய இரு குக்கிராமங்களை இணைக்கும் வீதியே இந்த சிவபாதசுந்தரனார் வீதியாகும் இவ்வீதி பெருந்தெருக்கள் திணைக்களத்தினால் பாரமெடுக்கப்பட்டு சுமார் 20 வருடங்களாகின்றன. ஆனால் இன்று வரை எதுவித பராமரிப்பு வேலைகளும் செய்யப் படாதது மிகவும் வருத்தப்பட வேண்டிய தொன்றாகும்.

சுமார் 3கி.மீ. தூரமான மேற்படி வீதி இன்று பாரிய குன்றுகளும் குழிகளும் உள்ள ஒரு வீதியாகக் காட்சியளிக்கின்

மக்கள் மடல்

றது. இதனால் வாகன, துவிச் சக்கரவண்டி ஓட்டிகள் படும் வேதனைகள் கொஞ்ச நஞ்சமல்ல. பாதசாரிகள் கூட இரவில் விழுந்து எழும்ப வேண்டிய நிலையில் உள்ளனர் பாடசாலை மாணவ மாணவியர் படும் சிரமங்களை எப்படி சொல்லுவது? விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை சந்தைப்படுத்த எடுத்துச் செல்லுவதில் எதிர் நோக்கும் சிரமங்கள் பற்பல. இத்தனைக்கும் சரித்திரப் பிரசித்தி பெற்ற கந்தவனக்கடவை சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு இவ்வீதியாற்றான் பெருந்தொகையான அடியார்கள் வந்து போகிறார்கள் என்றால் மிகையாகாது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த மேற்படி வீதி இன்று வாகனப் போக்குவரத்துக்கு லாயக்கற்று விளங்குகிறது. இவ்வவல நிலை பற்றியும் அதைப் புனரமைக்க வேண்டிய அவசியம் பற்றியும் முன்னர் பல தடவைகள் வீதிகள் தொடர்பான அதிகாரிகளுடன் பத்திரிகைகள் வாயிலாகவும் நேரிடையாகவும் தொடர்பு கொண்டு வலியுறுத்தியிருந்தோம். ஆனால் அவை எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கு போலாயின.

ஆகவே இத்தருணத்திலாவது மேற்படி வீதியின் அவலநிலையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் வந்து பார்த்து, ஆவன செய்ய உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பி. தங்கராஜ்
பொலிகண்டி.

# ஈழநாதம்

வடக்கு கிழக்கு

# "மாகாண சபை கலைப்பதுபற்றி இன்னும் தீர்மானிக்கவில்லை"

## நிபந்தனை 'இல்லையெனில் ஈ. பி. ஆர். எல். எவ்வை சந்திப்போம்" பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் ரஞ்சன்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைப்பது பற்றி இன்னும் ஒரு தீர்மானமும் மேற் கொள்ளப் படவில்லை என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ரஞ்சன்விஜேரத்தினா நேற்று நடந்தவாராந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அமைச்சரவைக்கூட்டத்தின் பின் நடந்த இம்மாநாட்டில் ஈ. பி. ஆர். எல். எவ் வுடன் பேச்சுவார்த்தை நடத்துவீர்களா? என்று கேட்கப்பட்ட ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில்பின்வருமாறுரஞ்சன்விஜேரத்தினா கூறினார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் எந்தவித முன்னிபந்தனையும் நியதியும் வைக்காமல் பேச்சுவார்த்தைக்கு வரத்தயாராக இருந்தால் அவர்களை நானும் அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீதும் சந்தித்துப் பேசத் தயாராக இருக்கிறோம். எந்தப் பிணக்குகளுக்கும், பிரச்சினைகளுக்கும் பேச்சு வார்த்தைகள் மூலமே தீர்வுகாண வேண்டுமென்பது தான் அரசின் கொள்கையாகும். இந்த வகையில் நிபந்தனை எதுவுமில்லாமல் பேச்சு வார்த்தைக்கு வரும் எவருடனும் நாம் பேசத் தயாராக இருக்கிறோம்.

மற்றொரு கேள்விக்குஅமைச்சர் ரஞ்சன் பதிலளிக்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுமென்றும் நிலமை சீராகி வருகிறதென்றும் கூறினார்.

ஜே.வி.பி. மீதான தாக்குதல்களைநிறுத்துவதெனஅரசு தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் ரஞ்சன் மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் சொன்னார்.

## காசோலை மோசடி

(அட்டாளைச்சேனை)

அட்டாளைச்சேனை தபால் நிலைய ஊழியர் ஒருவரும் கிராமசபையின் ஊழியர் ஒருவரும் சேர்ந்து வெளிநாட்டிலிருந்து ஒருவருக்கு வந்த ஐம்பதாயிரம் ரூபா காசோலையை மோசடி செய்து பணமாக்கியதாக விடுதலைப் புலிகளிடம் புகார் செய்யப்பட்டுள்ளது,

# ஹாட்லி, மெதடிஸ்த கல்லூரிகளின் 6-ம் ஆண்டு அனுமதிப்பரீட்சை ரத்து

(பருத்தித்துறை)

யாழ். கல்வித் திணைக்களத்தால் அவசரமவசரமாக நடாத்தப்பட்ட பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியின் 6ஆம் ஆண்டு பிரவேசப் பரீட்சை கல்வி அமைச்சுச் செயலாளரால் இரத்துச் செய்யப் பட்டுள்ளது.

இக்கல்லூரியில்6ஆம்ஆண்டு அனுமதிக்கு பருத்தித்துறை, புலோலி கொத்தணிகளில் இருந்தே விண்ணப்பங்கள் கோரப்பட்டு யாழ். கல்வித் திணைக்களத்தின் உத்தரவின் பேரில் பரீட்சை நடாத்தப்பட்டது.

இந்த அனுமதிப்பரீட்சை கல்வியமைச்சின் 6ஆம் ஆண்டு மாணவர் அனுமதி சுற்றுநிருபத்திற்கு முரணானது என பாடசாலை அபிவிருத்திச் சபைசுட்டிக்காட்டியும்கல்வித் திணைக்களம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனையடுத்துபாடசாலை அபிவிருத்திச்சபைகல்விஅமை ... பரீட்சை பகிரங்கப் பரீட்சையாக நடாத்தப்பட வேண்டும் எனவும் கல்வி அமைச்சு உத்தரவு பிறப்பித்திருந்தது.

தற்போது இக்கல்லூரியின் 6ஆம் ஆண்டு அனுமதிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பகிரங்கமாக கோரப்பட்டுள்ளன. அத்துடன் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் 6ஆம் ஆண்டு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களும்கோரப்பட்டுள்ளன.

1989 ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தியவர்கள் 25ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு உரிய ஆவணங்களுடன் ஹாட்லி, மெதடிஸ்த கல்லூரிகளின் அதிபர்களைச் சந்திக்க வேண்டும். இக்கல்லூரிகளை முதலாவதாக தெரிவு செய்த மாணவர்களுக்கு புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்றபுள்ளிகளின் வரிசையில் அனுமதி வழங்கப்படும்.

மேலும் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான பகிரங்க போட்டிப் பரீட்சை ஒன்று இம்மாதம் 30ஆம்திகதி நடைபெறும். இதற்கு 1989 டிசம்பர் 5ஆம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சைக்குத் தோற்றத் தகைமை பெற்றிருந்த மாணவர்கள் இற்றை வரை விண்ணப்பிக்காதிருந்தால் ரூபா 15/- கட்டணமாகச் செலுத்தி இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

முன்னர் விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

### சர்வதேச...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களைச் செய்யும் ஒரு தசாப்தமாக இருக்கிறது. வெளிநாட்டுக் கொள்கைக்கும் இது பொருந்தும். எமது சமூக, பொருளாதாரஅரசியல் நலன்களை சர்வதேச ரீதியில் வென்றெடுக்கும் வகையில் எமதுஉத்திஅமைய வேண்டும்.

எமது இளம் சந்ததியினரிடையே சர்வதேச நிகழ்வுகள் தொடர்பானவிழிப்புணர்வை

### கரைகாணா....

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி )

தொகையான பெண்களும் ளும் நடைபெற்றன.

நல்லூரில் நேற்றுப்பிற்பகல் நடந்த எழுச்சிநாள் கூட்டத்தில் மக்கள் முன்னணி உறுப்

### அரச எதிர்க்கட்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

குக் குறிப்பிட்ட பொருளாதார நன்மையை ஏற்படுத்துமா என்பதைப் பொறுத்தே அதற்கு அனுமதி வழங்கப்படும்.

பிரயாணம், தளபாடம் வாங்குதல், உபசார நிகழ்ச்சிகள் என்பவற்றுக்கு அநியாயமாகச் செலவு செய்வது உடனடியாக நிறுத்தப்படும்.

அதிகாரிகளினால் அல்லது அமைச்சர்களினால் நடாத்தப்படும் எந்தவொரு வைபவங்களிலும் மதுபானம் பரிமாறப்படக்கூடாது.

நியமன விடயத்தில் அநீதி இழைக்கப்பட்டதாகக்காணப்பட்டால் மட்டுமே அதற்குப் பரிகாரம்காண்பதற்கு அமைச்சர்கள் தலையிடலாம்.

அமைச்சர்களின் எண்ணிக்கை அவர்களுக்கு ஒதுக்கப்படும் கடமைகள் குறித்து அரசியல் யாப்பின் விதிகளுக்கமையவே தாம் அமைச்சர்களை நியமித்ததாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்,

ஒவ்வொரு துறையிலும், உற்பத்தியை அதிகரிப்பது, மக்களின்வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவது, வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு, விரயத்தை நீக்குதல், வளங்களின் மதிப்பை அதிகரித்தல் என்பன எமது குறிக்கோள் என்றும் அவர் கூறினார்.

### கிளிநொச்சி.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விரைவில் ஆரம்பித்து மழைக்காலத்திற்கு முன் முடிக்க வேண்டும். வேலைகளைச் செய்வதற்கு எத்தவித முட்டுக்கட்டைகளும் இனிமேல் இருக்கமாட்டாது.

ஆதலால் ஏப்ரல் மாதத்திலேயே அபிவிருத்தி வேலைகளைச் சகல திணைக்களங்களும் ஆரம்பிக்க வேண்டும்.

வாகனமின்றி நீர்ப்பாசனப் பகுதியினர் அபிவிருத்தி வேலைகளைத் துரிதமாகச் செய்ய முடியாது இருப்பதாகவும் கூறினர். நான் நாலு ''பிக்கப்'' களை கொழும்பிலிருந்து கொண்டுவரவுள்ளேன் அதில் ஒன்றை தற்காலிகமாக நீர்ப்பாசனப் பகுதிக்குத் தருவேன் அதைக் கொண்டு வேலைகளைத் துரிதமாகச் செய்து முடிக்கலாம்.

வெளியாருடைய தலையீடுகள் இருந்ததால் கடந்த காலங்களில் நடைபெற்ற வேலைகள் தடைப்பட்டுள்ளதாகக் கமநல சேவைத் திணைக்களம் கூறியது. அந்த மாதிரியான தலையீடுகள் எதிர்காலத்தில் இருக்க மாட்டாது. அதற்கான உத்தரவாதத்தை விடுதலைப் புலிகள் அளித்துள்ளனர். ஆதலால் வேலைகளைத் தொடர்ந்து செய்யுங்கள்.

வீதி திருத்த வேலைகளைச் செய்யக் கல்லுக் கிடையாது. ஒப்பந்தகாரர்கள் எவரும் ஒப்பந்த அடிப்படையில் செய்ய முன்வருவதில்லை எனக் கூறப்பட்டது. கொழும்பில் நடைபெறும் அரசாங்க அதிபர்கள் மகாநாட்டில் இது சம்பந்தமாகப் பேசி மதவாச்

### சிறுபோக....

( 1 ஆம் பக்கத்தொடச்சி)

போது 1ஆம் வாய்க்காலில் இருந்து 4ம் வாய்க்கால்வரை உள்ள வயல்களுக்கு குளத்து நீர் வழங்கப்பட்டது.

5 ஆம் வாய்க்காலில் இருந்து 8ஆம் வாய்க்கால் வரை குளத்து நீர் வழங்கப் படவில்லை. என்று அவர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

குளத்து நீர் வழங்கப்பட்ட காணிகள் நல்ல விளைச்சலைக் கொடுத்தது. நீர் வழங்கப்படாத பகுதி வயல்கள் விளைச்சல் குன்றிக் காணப்பட்டது.

பணம் படைத்தவர்களும் நிலப்பிரபுக்களுமே குளத்து நீர் வழங்கப்பட்ட பகுதியில் விவசாயம் செய்து வருகின்றனர், அப் பகுதியில்தான் இம் முறை சிறுபோகம் செய்யவும் அனுமதிக்கப்பட்டுள்ளது,

இது பணக்காரரை மேலும் பணக்காரராக்கவும், வறிய சிறிய வயல் நிலங்களையுடைய 5ஆம், 6ஆம், 7ஆம், 8ஆம் வாய்க்கால் மக்களை மேலும் வறியவர்களாகவுமே இத் திட்டம் வழிவகுக்கிறது. என்றும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

கடைசியாகச் செய்யப்பட்ட சிறுபோகத்தின்போதும் 1 ஆம் வாய்க்காலில் இருந்து 4 ஆம் வாய்க்கால் வரையுமே நீர் வழங்கப்பட்டது. இம் முறையும் அதே மாதிரிச் செய்யப் படுவதால் 5ஆம், 6ஆம், 7ஆம், 8ஆம் வாய்க்காலில் வயல்களையுடைய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்,

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வசதி படைத்தவர்கள் கூடுதலாக பயிர் செய்கின்ற பகுதிகளுக்குத் தொடர்ந்து நீர் வழங்கி வரும் அதே வேளை வறிய விவசாயிகள் விவசாயம் செய்யும் பகுதியை வேண்டுமென்றே புறக்கணித்து வருவது நீதிக்குப் புறம்பான செயலாகும்.

அதனால் இந்த அநீதியை எதிர்த்துப் போர்க்கொடி தூக்கியுள்ள நாம் அரசாங்க அதிபரிடமிருந்து நீதியான தீர்ப்பை எதிர் பார்க்கிறோம் என்று ஈழநாதம் நிருபரிடம் தெரிவித்தனர்.

### ரிசேர்வ் பொலிஸ்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யுடையோர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் அத்தியட்சகர் ரி.கே. ஜெயராஜன் ஈழநாதத்துக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், அம்பாறை, திருக்கோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுகளில் இன்று காலை ஆள் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை இடம் பெறும் என்றும், ஐந்து பிரிவுகளுக்கும் ஒரு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் ஐந்து நேர்முகப் பரீட்சைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்றார்.

யாழ்ப்பாணத்தில் நேர்முகப் பரீட்சைக் குழுவில் போதைவஸ்து தடைப் பிரிவு பணிப்பாளர் எம். பி. ஜெயநாதன், முல்லைத்தீவு ஏ.எஸ். பி. யோககுமாரன், யாழ்ப்பாண ஏ. எஸ். பி., அனுராதபுர ரிசேர்வ் ஏ. எஸ். பி., வைத்திய அதிகாரி டாக்டர் சண்முகம் ஆகியோர் இடம் பெறுவர்.

வர்த்தமானி விளம்பரத்துக்கமைய முன்னர் விண்ணப்பிக்காதவர்களும் தமது ஆவணங்களோடும், சான்றிதழ்களோடு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றலாம். ஆனால், வர்த்தமானிப் பத்திரிகை

### கொழும்புத் துறையில் உண்ணாவிரதம்

கொழும்புத்துறை கிழக்கு துறைமுகத்திற்கு அண்மையில் அன்னை பூபதி நினைவாக ஒரு நாள் அடையாள உண்ணா விரதம் கொழும்புத் துறை மக்களால் அனுஷ்டிக்கப்பட்டது. (24)

### வன்முறையால்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் சமர்ப்பிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். இந்தச் செலவீனத்தை சமாளிப்பதற்கு அரசாங்கம் வெளிநாட்டு உதவியை நாடும் இதேவேளையில் சகல அமைச்சுக்களும் அவற்றின் மூலதன நிதியில் இருபத்தைந்து வீதத்தை புனர் வாழ்வு, புனர் நிர்மாண நடவடிக்கைகளுக்கு ஒதுக்கவேண்டுமென அமைச்சரவை பணிப்புரை விடுத்துள்ளது.

### புனர்நிர்மாணம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிக்கு வரவுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி அமைய கொழும்பு பிரதிநிதி

வைக்காமல் பேச்சுவார்த்தைக்கு வரத்தயாராக இருந்தால் அவர்களை நானும் அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீதும் சந்தித்துப் பேசத் தயாராக இருக்கிறோம். எந்தப் பிணக்குகளுக்கும், பிரச்சினைகளுக்கும்

---

### சர்வதேச...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களைச் செய்யும் ஒரு தசாப்தமாக இருக்கிறது. வெளிநாட்டுக் கொள்கைக்கும் இது பொருந்தும். எமது சமூக, பொருளாதாரஅரசியல் நலன்களை சர்வதேச ரீதியில் வென்றெடுக்கும் வகையில் எமதுஉத்திஅமைய வேண்டும்.

எமது இளம் சந்ததியினரிடையே சர்வதேச நிகழ்வுகள் தொடர்பானவிழிபபுணர்வை தூண்டுவதும் ஒரு வழியாக இருக்கும். மீளமைப்புக்கான எமது முழு முயற்சிகளினதும் ஒரு பகுதியாக இது அமையும்.

:நன்றி பொருளியல் நோக்கு

பெப்ரவரி 1990

---

யின் 6ஆம் ஆண்டு பிரவேசப் பரீட்சை கல்வி அமைச்சுச் செயலாளரால் இரத்துச் செய்யப் பட்டுள்ளது.

இக்கல்லூரியில்6ஆம்ஆண்டு அனுமதிக்கு பருத்தித்துறை, புலோலி கொத்தணிகளில் இருந்தே விண்ணப்பங்கள் கோரப்பட்டு யாழ். கல்வித் திணைக்களத்தின் உத்தரவின் பேரில் பரீட்சை நடாத்தப்பட்டது.

இந்த அனுமதிப்பரீட்சை கல்வியமைச்சின் 6ஆம் ஆண்டு மாணவர் அனுமதி சுற்றுநிருபத்திற்கு முரணானது என பாடசாலை அபிவிருத்திச் சபைசுட்டிக்காட்டியும்கல்வித் திணைக்களம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனையடுத்துபாடசாலை அபிவிருத்திச்சபைகல்விஅமைச்சருக்குச்செய்தபுகார்களைத் தொடர்ந்து 6ஆம்ஆண்டுஅனுமதிக்கு கொத்தணி மட்டத்திலோ, கல்வி வட்டார மட்டத்திலோ அனுமதிப்பரீட்சை நடாத்தக் கூடாது என்றும்

6ஆம் ஆண்டு அனுமதிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பகிரங்கமாக கோரப்பட்டுள்ளன. அத்துடன் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் 6ஆம் ஆண்டு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களும்கோரப்பட்டுள்ளன.

1989 ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தியவர்கள் 25ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு உரிய ஆவணங்களுடன் ஹாட்லி, மெதடிஸ்த கல்லூரிகளின் அதிபர்களைச் சந்திக்க வேண்டும். இக்கல்லூரிகளை

மேலும் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான பகிரங்க போட்டிப் பரீட்சை ஒன்று இம்மாதம் 30ஆம்திகதி நடைபெறும். இதற்கு 1989 டிசம்பர் 5ஆம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சைக்குத் தோற்றத் தகைமை பெற்றிருந்த மாணவர்கள் இற்றை வரை விண்ணப்பிக்காதிருந்தால் ரூபா 15/- கட்டணமாகச் செலுத்தி இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

முன்னர் விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

---

### கரைகாணா....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொகையான பெண்களும் ஆண்களும் ஊர்வலமாக வந்து கலந்துகொண்டனர்,

காத்தான்குடியிலிருந்து பெருமளவிலான முஸ்லிம் மக்களும் ஊர்வலமாக வந்து கலந்து கொண்டனர். வெபர் மைதானம் நிரம்பி வழிந்தது.

மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும் மிகச்சிறப்பாக நேற்று நடந்த எழுச்சி விழாவில் லட்சக்கணக்கில் மக்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். இவ் விழாக்களில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

நல்லூரில் நேற்றுப்பிற்பகல் நடந்த எழுச்சிநாள் கூட்டத்தில் மக்கள் முன்னணி உறுப்பினர் செங்கதிர், மக்கள் முன்னணி மகளிர் பிரிவுப்பொறுப்பாளர் மாலினி, மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் பாரதி, வலிகாமம் அரசியல் பொறுப்பாளர் ஆஞ்சனேயர், வடமராட்சி அரசியல்பொறுப்பாளர் குணம், தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் பாப்பா, தீவுப்பகுதி அரசியல் பொறுப்பாளர் காஸ்ரோ திருமதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

---

### தமிழரை....

பிரதேசங்களைத் துண்டாடுதல், விட்டுக்கொடுப்புக்களை எவ்வாறு செய்யலாம் என்றே பேச்சுக்கள்நடத்தின. ஆனால் நாம் அம்மாதிரியான விட்டுக் கொடுப்புக்கள் எதையும் செய்யப்போவதில்லை. நாம் சாவிற்கு அருகில் நின்று பேசுகின்றோம். நாம் சமாதிக்கு அருகில் நின்று பேசுகின்றோம் எனவும் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் எமது மண்ணுடனும், வீசும் காற்றுடனும் உறவாடும் தியாகிகளின் இறுதிமூச்சும் இதுவேயாகும் என யோகி தெரிவித்தார்.

---

### வடகிழக்கு......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காப்பமைச்சு கருதுகிறது.

இதன் பிரகாரம் றிசேர்வ் பொலிஸ் பிரிவிலுள்ள நிரந்தர சேவையிலுள்ள தமிழ், முஸ்லிம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் விபரங்கள் வட-கிழக்குமாகாணத்திற்கு வெளியேயுள்ள பொலிஸ் நிலையங்களிலிருந்து திரட்டப்பட்டுள்ளது.

பூரண விபரம் கிடைத்தவுடன் இடமாற்றத் திட்டம் ஒன்று அமுலுக்குவரும். இதற்குப்பதிலாகச் சிங்களப்பொலிஸார் வட-கிழக்குக்கு வெளியேயனுப்பி வைக்கப்படுவார்களென விபரம் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

37

---

### அம்பாறை....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக திரு. காஸ்ரோ சித்திரைப் பண்டிகையன்று அங்கு சென்று தமிழர் குடும்பங்களைச் சந்தித்ததின் பின்னர், அம்பாறை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகளையும், அம்பாறை மாவட்ட அரச அதிபர் திரு.ஜி.முதன்நாயக்க அவர்களையும் சந்தித்து மேற்படி தமிழர் குடும்பங்களின் பாதுகாப்புப் பற்றி பேச்சு நடாத்தினார்.

இராணுவ அதிகாரிகள் பாதுகாப்பு வழங்குவதாக காஸ்ரோவிடம் உறுதியளித்தனர். மேலும் அம் மக்களுக்கு வேண்டிய சகல உதவிகளையும் கச்சேரி மட்டத்தில் வழங்குவதாகவும் அரச அதிபரும் உறுதியளித்தார்.

இதனைத்தொடர்ந்து திரு. காஸ்ரோ மிஹிந்தபுரவில் வாழும் தமிழர் குடும்பங்களையும் நேரில் சென்று சந்திக்க விருப்பதாகவும் தெரிவித்தார். (48)

---

லாம்.

வெளியாருடைய தலையீடுகள் இருந்ததால் கடந்த காலங்களில் நடைபெற்ற வேலைகள் தடைப்பட்டுள்ளதாகக் கமநல சேவைத் திணைக்களம் கூறியது. அந்த மாதிரியான தலையீடுகள் எதிர்காலத்தில் இருக்க மாட்டாது. அதற்கான உத்தரவாதத்தை விடுதலைப் புலிகள் அளித்துள்ளனர். ஆதலால் வேலைகளைத் தொடர்ந்து செய்யுங்கள்.

வீதி திருத்த வேலைகளைச் செய்யக் கல்லுக் கிடையாது. ஒப்பந்தகாரர்கள் எவரும் ஒப்பந்த அடிப்படையில் செய்ய முன்வருவதில்லை எனக் கூறப்பட்டது. கொழும்பில் நடைபெறும் அரசாங்க அதிபர்கள் மகாநாட்டில் இது சம்பந்தமாகப் பேசி மதவாச்சியிலிருந்து கருங்கல்லைப் பெற்றுத்தர முயற்சிக்கிறேன். யாழ்ப்பாணத்திலுள்ள ஒப்பந்தகாரர்களை அழைத்து ஒப்பந்தம் செய்ய முயற்சிக்க வேண்டும்.

கிளிநொச்சிக்கு தொலைபேசி வசதிகள் இல்லை. பதினைந்து லைன்களையாவது பெற்று அத்தியாவசியமான இடங்களுக்குத் தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்படல் வேண்டும்,

கிளிநொச்சி ரயில் நிலையத்திலிருந்து உறங்கல் வசதி (பார்த்) செய்ய முடியாது இருக்கிறது. தினமும் ஒரு படுக்கை வசதியாவது கிளிநொச்சிலிருந்து செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட திணைக்கள உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்வேன். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளைவழங்க பல வெளிநாட்டு ஸ்தாபனங்கள் முன்வந்துள்ளன. அவை அனைத்தும் யாழ்ப்பாணத்திலேயே செயற்படுகின்றன.

பல இடங்களிலிருந்தும் வந்து குடியேறிய இடம் கிளிநொச்சியே, இங்கும் பல அசம்பாவிதங்கள் ஏற்பட்டு இங்குள்ள மக்கள் பல ஆயிரக் கணக்கில் பாதிக்கப்பட்டுள்ளனர். வெளிநாட்டு ஸ்தாபனங்களின் உதவி இந்த மாவட்டத்திற்கே கூடுதலாகத் தேவைப்படுகிறது. ஆதலால் அந்த ஸ்தாபனங்களின் உதவியைப் பெற்று இந்த மாவட்டத்தை முன்னேற்ற வேண்டும்.

சில திணைக்களத் தலைவர்கள் தட்டச்சு இயந்திரம் வாங்குவதற்கும்கூட பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்தே பணத்தை எதிர்பார்க்கிறார்கள். இந்த நிலை தொடருமானால், இம்மாவட்டத்தின் அபிவிருத்தியை விடுத்து, திணைக்களங்களின் தேவைகளுக்கே இப்பணம் சரியாகி விடும் என்கிறார்.

---

களுக்கும் ஒரு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் ஐந்து நேர்முகப் பரீட்சைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்றார்.

யாழ்ப்பாணத்தில் நேர்முகப் பரீட்சைக் குழுவில் போதைவஸ்து தடைப் பிரிவு பணிப்பாளர் எம். பி. ஜெயநாதன்,முல்லைத்தீவு ஏ.எஸ். பி. யோககுமாரன், யாழ்ப்பாண ஏ. எஸ். பி., அனுராதபுர ரிசேர்வ் ஏ. எஸ். பி., வைத்திய அதிகாரி டாக்டர் சண்முகம் ஆகியோர் இடம் பெறுவர்.

வர்த்தமானி விளம்பரத்துக்கமைய முன்னர் விண்ணப்பிக்காதவர்களும் தமது ஆவணங்களோடும், சான்றிதழ்களோடு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றலாம். ஆனால், வர்த்தமானிப் பத்திரிகை விளம்பரத்தில் கோரப்பட்ட தகைமைகள் இருந்தால்தான் இவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் எனப் பொலிஸ் தரப்புப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நேர்முகப்பரீட்சை நாட்கள் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கைக் கேற்ப நீடிக்கப்படவுள்ளது.

---

### வன்முறையால்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் சமர்ப்பிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். இந்தச் செலவீனத்தை சமாளிப்பதற்கு அரசாங்கம் வெளிநாட்டு உதவியை நாடும் இதேவேளையில் சகல அமைச்சுக்களும் அவற்றின் மூலதன நிதியில் இருபத்தைந்து வீதத்தை புனர் வாழ்வு, புனர் நிர்மாண நடவடிக்கைகளுக்கு ஒதுக்கவேண்டுமென அமைச்சரவை பணிப்புரை விடுத்துள்ளது.

---

### புனர்நிர்மாணம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிக்கு வரவுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி அமைய கொழும்பு பிரதிநிதி ரொபெட் இங்லன்ட் பிரதம செயலாளர் ஆனிக்கினாய் ஆகியவர்களுடன் இவ்வமையத்தில் வேலை செய்யும்தமிழ் பிரதிநிதியான ஏ. எஸ். சிவாநந்தன் ஆகியோர் இக்குழுவில் இடம்பெறுகின்றனர். இவர்கள் இம்மாதம் 22ஆம் திகதியளவில் விஜயம் செய்யவுள்ளனர். (லோ)

---

கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையில்

## ஊழியர் பற்றாக்குறைவினால் நோயாளர்கள் பெரும் அவதி

(கொழும்புத்துறை)

கைதடி ஆயுர்வேத வைத்திய சாலையில் ஊழியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் நோயாளர்கள் அசௌகரியத்திற்கும் மிகுந்த சிரமத்திற்கும் உள்ளாகி வருகின்றனர்.

தற்போது நாட்டில் சுமுகமானசூழ்நிலை தோன்றியுள்ளதால் கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையில் வார்ட்டுகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்கள் மற்றும் வெளி நோயாளர்கள் தொகை அதிகரித்து வருகின்றது.

இதனால் நோயாளர்களைப் பராமரிக்க முடியாதநிலையில் வைத்தியசாலை நிர்வாகம் மிகச் சிரமத்திற்குள்ளாகி உள்ளது என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

1983ஆம் ஆண்டிற்கு முன் இவ்வைத்தியசாலையில் ஏறக்குறைய 35 சிற்றூழியர்கள் பணியாற்றியுள்ளனர். தற்போது 14ஊழியர்கள்மட்டுமே பணிபுரிவதாகவும் முன்பு இங்கு எட்டுத் தாதிகள் கடமையாற்றியதாகவும் தற்போது ஒரே ஒரு தாதி மட்டும் சேவையாற்றிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வட பகுதியில் சகல வசதிகளையும்கொண்ட ஓரேயொரு அரசினர் ஆயுர்வேத வைத்திய சாலை இதுவேயாகும். இங்கு 150 படுக்கைகளைக் கொண்ட நோயாளர் வார்ட்டுகள் உள்ளன.

அண்மைக் காலமாக நோயாளர்களின் தொகை அதிகரித்து வருவதால் ஊழியர் பற்றாக்குறையை நீக்கி நோயாளர்களுக்கு சிறந்த சேவை செய்ய வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பலமுறை இவ் வைத்திய சாலையில் நிலவிவந்த குறைபாடுகள் பற்றிக் கொழும்புத் தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொண்டும் இன்று வரை இக்கோரிக்கைகள் நிவர்த்தி செய்யப்படாதுள்ளது மிகக் கவலைக்குரிய விடயம் எனப் பொதுமக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். 24

---

### எந்த நாட்டின்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளார்கள் என்றால் முழுக்க முழுக்க அவர்களின் சொந்த முயற்சியே என்று குறிப்பிட்டார்,

இவர் தனது பேச்சில் இந்தியா தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் எவ்விதமான அணுகு முறையைக் கொண்டிருந்தது என்பது பற்றி விளக்கமளித்தார்.

இவ்விளக்கத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தியாவுடன் நட்புறவுடனும், விட்டுக் கொடுப்புடனும் நடந்து கொள்ள முற்பட்டபோது இந்தியா விடுதலைப் புலிகளை அழிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தது எனக் குறிப்பிட்டார்.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்தில்லுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் -20ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

---

மறைந்தும் மறையாத அன்னை

### பூபதி கணபதிப்பிள்ளை

அவர்களுக்கு எமது இதயம் நிறைந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.



மட்டுநகர்ப் பூங்காற்றே
தமிழ் ஈழக் கவிதையூற்றே
விண்பதித்த நீல நிலா
விழிப்பார்வை கொண்டவளே!

மண்புதைத்த தமிழினத்தை
மலையேற்ற நின் உயிர் ஈந்தவளே
உன் புகழே பாடுகின்றோம்.

அன்னையே,
நீ குறித்த குறிக்கோளே லட்சியமாய்க்
கொண்டிங்கே வாழ்கின்றோம்
வாழ்த்து எம் பயணம்
வெற்றியுற — எம் வீட்டுத்
தீப விளக்கொளியாய்
நீயிருந்து வழிகாட்டு

**வடபிராந்திய போக்குவரத்துச்சபை**

ஊழியர்கள், கோண்டாவில்.

R-418